# முகடு

Mukadu

இருமாத இலக்கிய இதழ். பங்குனி - சித்திரை 2016 ஓலை - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பரணிதரன்



# சொல்லட்டும்

ஈழநிலவன்

எடுத்து வா
கண்ணீரை யல்ல
காற் சிலம்பினை!

முடித்து வா
மதுரை எரித்தல்ல
உன் உடம் பிற
மாதுக்களின்
நரகை எரித்து!

செருப்பில்லாமல் நீ
செவ்வாய்
போனாலும்
பொறுப்பில்லாமல்
போலி என்பார்
வெறுப்பில்லாமல்
அது சரித்திர வேலி
என்று வா

ஆங்காங்கு
சொல்லட்டும்
ஒரு கண்ணகியல்ல
பல கண்ணகிகள்
உருப்பெற்று
விட்டனர்
என்று

பாண்டியர்கள்
பரப்பட்டும்
கோபம் பெண்ணின்
ஒரு குணமல்ல என்று

சீறும் பாம்புகளும்
மாறும்
பச்சோந்திகளும்
கிழக்கு கரையில்
நுரையாய்
கழியட்டும்



ஆதிக்க மலைகளை
நனைக்கும் மழை
நங்கை என்று
நாணல்
விளம்பட்டும்

சோகம் சோதிக்கும்
தருணம்
சரி பாதிக்கு
பாதியாய்
இன்பம் போதிக்கும்
பௌர்ணமி நிலவு
சுந்தரி இவளே
என்று
சங்கரன்
சொல்லட்டும்

உருவமற்ற காற்றும்
வடிவமற்ற தழலும்
நீந்தி வாழும் நீரும்
சோர்ந்து போகாத
சூரியனும்
சொல்லட்டும்
பெண் பிரபஞ்சத்தின்
பிரதி என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகடு இரு மாத இலக்கிய இதழ்


ஆசிரியர் குழு

யோகு அருணகிரி
நி .வனஜன்
ப. பார்த்தீபன்
சு.வண்ணன்
து. தயாளன்
க. குமரன்

இதழ் வடிவமைப்பு

நி . வனஜன்
ப .பார்த்தீபன்

ஒப்பு நோக்குனர்

சு.வண்ணன்


**ஒரு மனிதனின் சுயமான ஆழ்ந்த சிந்தனைக்கும் அவன் கூரிய அவதானிப்புக்கும் எந்த புத்தகமும் மாற்றாக முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் மற்றவர்களின் பார்வையில் எழும் கருத்துக்கள் ஆய்வுகள் அனுபவங்கள் யாவும் தாம் வாழ்தல் எனும் அடிப்படையிலே எழும் விடயங்கள் அவை நமக்கான சிந்தனை அல்ல**

"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்
தந்நோய் போல் போற்றாக்கடை"

இளம் படைப்பாளிகளின் படைப்புக்கள் முதன்மைப்படுத்தப்படும்

எம் பண்பாட்டு வாழ்வியலோடு கூடிய பிரஞ்சு மொழி ஆக்கங்கள்

இளையவரிடம் இருந்து வரவேற்கப்படுகின்றது.

நன்றி


தொடர்புகளுக்கு

தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை
http://www .facebook .com / pages/தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை
email:// mukadu.editer@gmail.com
*http://www.mukadu.com*


**படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே உரித்துடையவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்மை தோற்றதே

பிரபு தாஸ்

"என்னைக் கொல்" என்றது அந்தப் பெண்மையின் குரல். மாலைப் பொழுது மையிருள் கௌவிக் கொள்ளும் நேரம். ஊரார் சூழ்ந்த சுடுகாட்டு கொலைக்களம். இரு கைகளும் கட்டி மண்டியிட்டிருந்தாள் ஒருத்தி. கிழிந்த சேலை கீழே விழ, மானம் காக்க சுருண்டு விழுந்தாள் அந்தக் கரிய நிறத்தவள். அவள்தான் சந்திரவதி. காசிராசனால் தனக்கிட்ட கட்டளை நிறைவேறும் வரை விடமாட்டேன் என்று கொக்கரித்துக் கொண்டு, தரையில் விழுந்தவளைத் தூக்கி மண்டியிடவைத்து தன் வாளை ஓங்கினான் புலையர் கூட்டத்தில் ஒருவன். அவன் வேறு யாருமல்ல வாய்மையிலும் வீரத்திலும் அதி சிறந்தவன் என்ற அரிச்சந்திரன்.

**இறைமீது பற்றுள்ளவர்க்கும் வாய்மையே பேசுபவர்க்கும் இக்கதை பிடிபடாமல் (பிடிக்காமல் கூட) போகலாம். அதை நான் பொருட்படுத்தவில்லை.**

இந்தக் கொடியவள் என்ன பாவம் செய்தாள்,

கொலைத் தண்டனை கிடைப்பதற்கு?

இது சூழ நின்றவர்களில் சிலர் தங்களுக்குள் கேட்டுக் கொண்டனர். ஊர் சூழ்ந்தாற் போதுமே...!அப்படித்தான் இருந்தது அங்கு நின்ற கூட்டத்தின் விவாதம்.

ஐயோ! அவள் காசிராசன் மகனைக் கொன்றுவிட்டாள்.

இல்லை அவள் தன் மகனைக் கொன்றுவிட்டாள்.

இல்லையில்லை அவள் மகன் விடம் தீண்டி மடிந்தான் என்றல்லவா சொன்னார்கள்.

அப்படியானால் இவன் பழி தீர்க்கிறானோ?
இவன் யார்?
"..........."

பேச்சுகளின் சலசலப்பு சந்திரன் காதில் லாவகமாக உரசியது. அவன் ஓங்கிய வாளை சற்று நிறுத்தி, எனது வேலை பிணம் சுடுவதும் சுடுகாட்டைக் காப்பதும். என்று என்னை இந்தப் புலையர் கூட்டத்திற்கு கீர்த்தி விலைகூறி விற்றானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிலிருந்து இப்படி ஒரு உயிரை நான் பறித்ததில்லை. உயிரற்ற உடலைத்தான் சுடுகின்றேன். இன்று இந்த கொலைத் தொழிலை செய்து என்னலத்தை காக்கவா? எண்ணங்கள் அவனை ஆட்கொண்டன.

கோசலநாடு, தெளிந்த வானம், நட்சத்திரங்களை அடிமையாக்கி தன் ஆதிக்கத்தை செலுத்தியிருந்தான் வானத்துச் சந்திரன். காமசாலைக்குள் தன் குலப் பெண்கள் படும் சஞ்சலங்களை இராப் பொழுது முழுவதும் கண்டு சகித்துக்கொள்ள முடியாமல் ஒளி மங்கி இந்த பூவுலகமே வேண்டாம் என வேறு கிரகத்தைத் தேடிச் செல்ல முடிவெடுத்து நகர்கிறான் முழுமதி. வெம்மை போகும் வழி, ஆசை இவனையும் விட்டு வைக்கவில்லை. அகண்டு விரிந்த பாலைவனம். கண்ணுகெட்டிய தூரம் வரை கானல் நீரின் ஆதிக்கம். உலகத்தாசை நீக்கியவன் சுவர்க்கம் அடைந்ததாக எண்ணி கொக்கரித்த வருணன், தன் பொற்றேரை கற்றேராக்கி மறைத்து வைத்துவிட்டுச் சென்ற பாலைவனம். கொங்கைகளில் சந்தனச் சேறு, அதில் வடிந்தோடும் இரத்த அருவியாக நாக்கு நீண்டுள்ள சுருண்ட கரிய கூந்தலையுடைய காளி பாலைவனக் காவலாளி. அவளிடம் மண்டியிட்டு வணங்கி கற்றேரை பொற்றேராக்கி தனதாக்கிப் பெற்று புளகாங்கிதங் கொண்டு விரைந்தான் சந்திரன்.

**கரும்புகளினாலும் மகர தோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட சுயம்வர மண்டபம் எனும் சந்தை. மங்கையின் வருகைக்காக காத்துக் கிடந்தது சந்தை நிறைவாக ஆண் வியாபாரிக் கூட்டம்.**

தெறிக்க, இது என் குலத்தரசன் ஆளும் பூலோகம் உனக்கு இங்கு இடமில்லை என விரட்டி வருகிறான் கொடிய சூரியன். காமசாலைகளில் இரவில் காமபானுவம் ஈடேறியதை வாயில் அசைபோட்டுக் கொண்டு தெருவில் வெளியேறி நடந்தவர்கள் சந்திரனை கவனித்ததாக படவில்லை. இரவு நகர்வலம் முடித்தவன் இவர்களின் சகசலப்புகளின் இடையே நகரின் ஆரவாரங்களையும் தாண்டி நடந்து அரண்மனை வாயிலை அடைந்தான் சந்திரன்.

வாயிலில் காத்திருந்த மந்திரி சத்தியகீர்த்தி, அரசே செய்தி.

என்ன செய்தி?

பல காடு தேசங்கள் சுற்றி வந்த சில மாதவ முனிவர்கள் வந்துள்ளனர். அவர்கள் தங்கள் தோள்களுக்கு இணையான மங்கையைக் கண்டதாகக் கூறித்தெரிவிக்க வந்துள்ளனர். மாதவ முனிகளின் அனுபவத்திற்கு அகப்பட்டு அவர்களின் அனுமானங்களின் அடிவழியே பயணிக்கும் இவனுக்கு பூரிப்பே மேலிட்டது. அவர்களைக் காணத் துடித்தவனாய் அவாக் கொண்டான்.

எந்த நாட்டில் கண்டுவந்தார்களாம்?

கேள்விகள் வேகம் எடுத்தன.

கன்னோசி நாடு என்று நாட்டின் பெருமை பேசுகின்றார்கள். ஆக கன்னோசி நாடாகத்தான் இருக்குமென நான் எண்ணுகின்றேன்.

சபா மண்டபத்தில் இருந்தவர்களை வணங்கி, நீங்கள் கொண்டு வந்திருக்கும் செய்தி மிக்க மகிழ்ச்சி தருகிறது அடியேனுக்கு. இன்றே புறப்படுவோம் கன்னோசி நாட்டிற்கு சந்திரதயமன்னன் அறிவித்த சுயம்வரச் சந்தைக்கு. ஆணையிட்டபடியே வேகமானான் புறப்படுவதற்கு.

கானல் நீர் படிகிறது. சூரியன் காய்கிறது. சூட்டில்புழுதியைக் கிளறியபடி குதிரைகள் பாய்ந்து சென்றன. பனி பொழிவு லேசாக சாரல் படுகிறது. கூடவே கூதலும் கூட்டிக்கொண்டு எங்கிருந்தோ வந்த தென்றல் வெயிலின் தாகத்தைத் தணிக்க, மழை பொழிந்து அந்த விரிந்த மருத நிலம் இவர்களை வரவேற்கிறது. செழுமையுடைய சரயு நதியின் சலசலப்பு காது-களை இனிமையாக்குகின்றது. சரயு நதியைக் கடக்கையில் இவர்களின் வருகை கண்டு நிலத்திற்கு மேலே வெள்ளம் பெருக மீன்கள் அதில் ஓடி மறைகின்றன.

கூட்ட நெரிசலில் ஆடவர்களின் தோள்களில் மின்னலை ஒத்த பெண்களின் கொங்கைகள் உரசிப் பிதுங்குகின்றன. அறுந்துவிழுகின்ற ஆபரணங்களையும் மாலைகளையும் கண்டுகொள்ளாமல் செல்கின்றனர். அழகிய பெண்கள் இவ்வாறு செல்கின்ற பொழுது பல ஆடவர்களின் தோள்களிலே இவர்களின் கொங்கைகள் உரசுதல் கூடாதென இவன் முன்னோர் மனுஸ்மிருதியில் எழுதி வைக்கவில்லை.

"..........."

ஒருவாறு காடுகளையும் மலைகளையும் கடந்து மணக்கோலம் பூண்ட கன்னோசி நாட்டின் மகரவாயிலை அடைந்து சபா மண்டபத்திற்குள் நுழைந்தனர்.

கரும்புகளினாலும் மகர தோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட சுயம்வர மண்டபம் எனும் சந்தை. மங்கையின் வருகைக்காக காத்துக் கிடந்தது சந்தை நிறைவாக ஆண் வியாபாரிக் கூட்டம். (ஆணாதிக்கத்தின் சந்தையில் பெண் மட்டும் விற்பனைப் பண்டம்) மண்டப வாயிலில் முரசொலி முழங்க வெற்றியையே தனதாக்கும் வீரன் ஒருபால்வர, வண்டுகள் இன்னிசை இராகம் முழங்க சந்திரவதி தன் தோழிகளுடன் மண்டபத்திற்குள் நுழைந்தாள். மயில் போன்ற சாயல், பசும்பொன் வளையல்கள் அணிந்த இருகரம் முன்னே ஒன்றை ஒன்று பிணைத்திருக்க, சங்கு வளையல்கள் கல கலவென சப்திக்க, கயல் போன்ற இரு கண்கள் காதிலணிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழைகளோடு பொருந்தி பார்ப்பவரை மையல் கொள்ள வைக்கின்றன. இருந்த போதும் அவள் முகத்தை இனம்புரியா சோகம் ஆட்கொண்டுள்ளது. தனங்கள் என்ற இரு மேரு மலைகளின் கனத்தைத் தாங்குவதற்கு சக்தியில்லாத இடை. அது ஒடிந்து போகாமல் இருக்க கால்களை பூக்கள் மேல் மெல்ல வைத்து மிதித்துக் கொண்டு முன்னே போ என காலின் பொன் சிலம்புகள் சொல்லுகின்றன. சிக்கவிழ்த்து நடுவே வகிர்ந்தெடுத்துள்ள கூந்தலாகிய கொண்டை நீண்ட சுழிகளையுடைய ஆற்றுநீர் போல் காணப்பட அதில் ஆபரணங்கள் மின்ன, பூக்கள் மணம் வீச சந்திரவதியானவள் நடந்து அழகிய அரியணையில் அமர்ந்தாள்.

தோழிகளில் ஒருத்தி, மண்டபம் நிறைந்த மன்னர்கள் ஒவ்வொருவராக பெயர்களைக் கூற கோசலம் என்கிற நாட்டையுடையவன் அரிச்சந்திரன், என்ற பெயரைக் கேட்டவுடன் சந்திரவதியானவள் கழுத்தை நீட்டி ஒருகணம் பார்த்து அவன் முகத்தை உணர்ந்தாள். சந்திரனும் அவளின் முகத்தைப் பார்த்து கழுத்தில் இருக்கும் மாங்கல்யத்தைக் கண்டான். சற்றே முகம் மாறியது. அவையில் எழுந்து, இது என்ன கொடுமை? முன்னே ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு கட்டிய மாங்கல்யத்தை இன்னமும் கட்டிக்கொண்டுள்ள பெண்ணை, அதை நீக்கி இடண்டாவது முறை திருமணம் செய்து வைப்பீர்களோ? இது முறையோ? சபா மண்டபமே திகைப்பில் ஆழ்ந்தது. எங்கும் மௌனமே பாசையாய் பரவி சூழ்ந்து கொண்டது. சந்திரதயன் தலை குனிந்திருக்க, அந்த அமைதியைக் கலைத்தால் போல ஆட்கொண்ட சோகத்தை உடைத்து எழுந்து ஆவேசமாக, கோசலநாட்டு குமாரனே! என் கழுத்தில் மாங்கல்யம் இருப்பது என்னவோ உண்மைதான். நான் பரமசிவனால் வஞ்சிக்கப் பட்டவள், ஒரு பாவமும் அறியாதவள், என் செய்வேன்?

"........"

மீண்டும் மௌனமே குடி கொண்டது!

சந்திரதயன் முன்னே நிகழ்ந்தவற்றை அவையில் கூறுகின்றான்.

சந்திரவதி மாசற்றவள் என்பது இவன் மனம் உணர்ந்தது. எவரோ இருவர் செய்த சூழ்ச்சியின் வினை இவளை மனதளவில் சூழ்ந்துள்ளது, பாதித்துள்ளது. சுயபிரக்ஞை இல்லாமல் நடந்தேறிய செயலால் இவளை மாசுபடுத்துவது, வஞ்சிப்பது இழிவான செயலாகுமே!

மங்கையே! "உன் வாய்மை வெல்லும்" எப்போது உன் உருவம் எனக்குள் விசனப்பட்டதோ அன்றே உன்னை என் மணவினைக்கு துணையாகுவதென வந்துள்ளேன். சம்மதித்தால் சுயம்வர விதிப்படி இந்த மாலையைச் சூடிக்கொள். வாழ்க்கை எனும் சீவநதியில் நீந்துவதற்கு மனலயிப்பு இல்லாமல் நடைபிணமாய் கன்னோசியில் காலம் கழித்தவள், கணப்பொழுதில் கனத்த மனதை வரமாகக் கொடுத்த கன்னோசியை விட்டு புறப்படத் தயாரானாள். மாலையை நீட்டிய சந்திரனின் இரு கரங்களைப் பற்றி மாலையைத் தானே அணிவித்து சந்திரன் தோள் சேர்ந்து மணவினைக்கு தயாரானாள். இருவரும் மகிழ்ச்சியுடன் கோசலம் திரும்பினார்கள். இன்பமாக அவர்கள் வாழ்வில் ஓர் ஆண் மகவையும் பெற்றெடுத்தார்கள். அயோத்தி நகரமே கோலாகலம் பூண்டவேளை, யாரோ உருட்டிய சோளியின் ஆட்டத்தை முடித்து, நினைத்த கருமத்தை நிறைவேற்றி, அதைச் செய்கையிலும் நிகழ்த்திட பன்னசாலையில் தவங்கிடக்கிறான் கோசிகன். எடுத்த கருமம் கனியும் நாளென நிக்ஷ்டையிலிருந்து எழுந்துவிட்டான்.

விழா முடிந்து சந்திரன், மந்திரி சேனைகளுடன் நகர்வலம் வந்த வேளை குளக்கரையில் சென்று சற்று ஓய்வெடுக்கும் நேரம், கோசிகனின் தவத்தினால் கிடைத்த இரு சண்டாளிகள் வேற்றுருக் கொண்டு சந்திரனைத் துதித்து புகழ்ந்து பாடத் தொடங்கினர். அவர்கள் இருவரின் குழல், யாழ் இசையினால் மெய் மறந்து சந்திரனும் மந்திரியும் சேனையும் ரசித்தனர். கூடவே இயற்கையும் மெய் மறந்து கிடந்தது. தாங்கள் இசை பாடி பரிசில் பெற வந்த புலைச்சிகள் என்று வந்த காரணத்தை கூறினார்கள். சந்திரனும் உங்கள் இசையால் மெய் மறந்தோம், உங்களுக்கு பரிசில்கள் தரப்படும் பெற்றுச் செல்லுங்கள் என்று கீர்த்தியிடம் ஆணையிட்டான். கொண்டு வந்த தங்க ஆபரணங்களை அள்ளி வழங்கினான். இல்லை சந்திரா, இவையனைத்தும் உன் மனதின் சம்மதத்தினால் தரப்படுகின்றன. இவை வேண்டாம் எமக்கு. நீர் வெற்றிமுடி சூடும்வேளை பிடித்துக் கொள்ளும் வெண்கொற்றக் குடை வேண்டும். இதைக் கேட்ட கீர்த்தி கோபங்கொண்டு பரிசில்களானது கேட்டுப் பெறுவதல்ல, கொடுப்பவற்றைப் பெறுவது. பொன்னும் பொருளும் மட்டுமே இந்த வேளை தருவதற்கு உள்ளது. பெற்றுக் கொள்ளுங்கள்.

இல்லை, அது இல்லையேல் எம் இருவரையும் கட்டியணைத்து சுகத்தினை தரவேண்டும். என்னிடமே ஆணையிடுகின்றீர்களா? கடுங்கோபங் கொண்ட சந்திரன் அவர்களை அடித்து விரட்டுங்கள் என்றான்.

**இராகங்கள் மட்டுமே வேண்டத்தக்க கீழ்ச்சாதிப் பெண்களை நான் வேண்டேன், ஒருபோதும் வேண்டேன்.**

தங்களை இசைபாடி மகிழ்வித்த எங்களுக்கு பரிசிலும் தரவில்லை, நாம் கேட்டவற்றையும் எமக்குத் தரவில்லை, சந்திரா உன்னிடம் வாய்மை உண்டென நினைத்து வந்தோம். ஆனால் அது உன்னிடம் இருப்பதாகத் தெரியவில்லை. எம்மை ஏமாற்றிவிட்டாய். கோபங்கொண்ட சந்திரன் வாளை உருவி அவர்களை விரட்டினான். அடர்ந்த காட்டில் செய்வதறியாது பதறியோடி கோசிகன் காலில் விழுந்தனர் சண்டாளிகள். அவர்கள் முகத்திலும் மார்பிலும் படர்ந்த இரத்தக் கசிவுகளைக் கண்ட கோசிகன் கோபங்கொண்டு கையில் இருந்த தருப்பைப் புல் நடுங்கவும் இரு கால்களும் வருந்தவும் நீண்ட சடை முடிவிரிந்தபடி விரைந்து போகிறான் சந்திரனிடம்.

சபா மண்டபம் அதிர மகாமுனிவரே வருக, என அழைத்து காலில் விழுந்து வணங்கினான். தாங்கள் கூறியனுப்பினால் அடியேன் வந்திருப்பேன். நீங்கள் என்னை நாடி வந்த காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன குருவே. தங்கள் கோபத்திற்கு காரணம் யாது?

இயல்வது கரத்தலாகிய செய்கையுள்ளவர்கள் இவ்வாறு என் பெண்களை விரட்டி விடமாட்டீர்கள்.

என்ன சொல்கிறீர்கள் தாங்கள்?

இவர்கள் உங்களது பெண்களா?

அறியோம் குருவே, நாம் அறியோம். இவர்கள் தகுந்த வார்த்தைகளில் எம்முடன் பேசவில்லை, அதனாலேயே இவர்களை விரட்டினேன் என்றான் மீண்டும் ஒருமுறை காலில் விழுந்து.

கழுத்தை அறுத்துவிட்டு ஏனென்று கேட்டால் நான் தவறுதலாகச் செய்தேன் என்பதுல்போல திடமாக கூறுகின்றாய் சந்திரா. நான் அனுப்பிய மிருகங்களைக் கொன்றாய், பன்றியை அம்பெய்து கொன்றாய், என் பெண்களை விரட்டியடித்தாய். இவைகளை எல்லாம் பொறுத்துக் கொள்கிறேன் இவர்கள் இருவரையும் விவாகம் செய்து கொண்டால்.

என்ன கூறுகின்றீர் முனிவரே?

நீச சாதியினருடன் என் குலம் கூடுவது முறையோ? இந்த இழிசெயலை செய்யத் தூண்டுவதும் நீரோ?

வசிட்டன் சாபத்தினால் புலையனான திரிசங்கு மகனே! இந்தப் பெண்கள் தனங்களில் நீ கூடுவது உனக்கு நீதியல்லவோ.

இவ்வுலகில் எல்லாமுமாக எமக்குண்டாயிருக்கிறீர் என எண்ணியிருந்தோம் என்று சந்திரவதியும் தேவதாசனும் சந்திரனும் உம்முடைய பாதமே எங்களுக்கு கதி என கோசிகன் பாதங்களைப் பற்றிக் கொண்டனர். அதற்கு கோசிகன் தாய், தந்தை, சகோதரன், முன்னுள்ள ஐஸ்வரியமும் அவற்றைக் கொடுத்தவன் நான். என்னை இப்படி உயர்த்திச் சொல்லி வெல்லத் தக்கவனும் நீயே. இப்படி வெல்லுவதற்கான சாமர்த்தியம் உன்னிடத்தில் மட்டுமே உள்ளது. வேறு யாரிடத்திலும் நான் கண்டதில்லை. இப்போது என் பேச்சிற்கு மறு வார்த்தை பேசுகின்றாய்.

ஐயா! இல்லை இல்லை, உங்கள் வார்த்தைக்கு மறு வார்த்தையா?

அடியேன் எப்போதும் உங்கள் அடிமை. என் கண்களைக் கேட்டாலும் தருகிறேன். போதாததற்கு நான் ஆளுகின்ற இந்தக் கடல் சூழ்ந்த கோசல நாட்டை வேண்டினாலும் என் செல்வத்துடனே சேர்த்துத் தருகின்றேன். இவைகளிருக்க இராகங்கள் மட்டுமே வேண்டத்தக்க கீழ்ச்சாதிப் பெண்களை நான் வேண்டேன், ஒருபோதும் வேண்டேன்.

சந்திரன் அப்படிக் கூறவும் கோசிகன் மனம் புளகாங்கிதப்பட்டு, நீ அப்பபடிச் சொல்லுவாயானால் எனக்குச் சம்மதமே. சந்திரா நீ ஆசையில்லாமல் "நான் ஆளுகின்ற நாட்டை வேண்டுமானாலும் தருகிறேன்" என்று சொன்னதே போதும். இனி இந்தக் கடல் சூழ்ந்த கோசலம் முழுவதும் என்னுடையதேயாயிற்று என்று எழுந்து கூத்தாடினான்.

"................"

சற்றும் இதை எதிர்பாராத சந்திரன் சில நேர மௌனத்தின் பின் சந்திரவதியையும் தாசனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். அதனை இடை மறித்தார் முனிவன். சந்திரா நில்லு!

"........"

நீ தரித்திருக்கும் ஆடைகளும் இப்போது எனக்குச் சொந்தமானவை. அதனால் அவற்றைக் களைந்து வைத்துவிட்டுச் செல். எதுவும் பேசமுடியாமல் தனது ஆடைகளையும் தாசனது ஆடைகளையும் களைந்து கொடுத்துவிட்டு நடந்தான்.

இல்லை, அவள் தரித்திருக்கும் வஸ்திரமும் எனக்குச் சொந்தமானதே! அதையும் நீயே களைந்து கொடுத்துவிட்டுச் செல். பெண்ணின் கற்பை சூறையாடுபவனை விடவும் கொடுமை அதற்கு ஒத்துப்போவதே!அந்தச் செயலைச் செய்யத் துணிந்தான் சந்திரன் தான் பொய்த்துவிடக் கூடாதென. கணவன், மகன் இருவரின் நிலை கண்டு தவித்து நின்ற சந்திரவதியின் ஆடைகளைக் களைந்தான் அரிச்சந்திரன். நடை பிணமாக நின்ற அவள் தன்னைச் சுற்றி என்ன நிகழ்வதென அறியாமலே தரையில் சாய்ந்து மயங்கினாள். ஏன் இந்தப் பேடியானவன் இச் செயலைச் செய்கிறான்? இந்தக் கொடியவன் இவள் கணவனா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத்தீ



அன்னையே அன்று
நீயும் அனைவர்போலவும்
சாதாரன பெண்தான்
இன்று நீ
எழுச்சியின் இருப்பிடம்
அறப்போர் தொடுத்த
அணையா விளக்கு
மட்டுநகர்தந்த
தியாக சீலியே
மண் மானம் காத்த
எம் சொந்தம் நீ
உன் வயிற்றில்
முட்டிய தீ
அறப்போராய்
இன்றும் அகிலமெங்கும்
அணையாது எரிவது காண்பாயோ!

அன்றொரு நாள்
எரிந்தது மதுரை
இன்றும் எரிகிறாய் நீ
மட்டு நகரில்
மாசற்ற சோதியாய்

நெஞ்சினில் உறுதியேற்று
இலட்சிய வேள்விக்காய்
தியாகத்தீயினில் ஆகுதியானவள்
விடுதலை அவாவுடன்
விழி மூடியவளே...

-பாமினி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநங்கை எழுதிய ஈழத்தின் முதலாவது நூல்



# மூன்றாம் பாலின் முகம்





“பொதுவாக மனித இனம் ஆண், பெண் என இரண்டு பாலினங்களினைக் கொண்டது எனினும், மனித உடலில் இருக்கக்கூடிய நிறமூர்த்தங்கள் ஹார்மோன்கள் என்பவற்றிலும், உளவியல் வேறுபாடு காரணமாகவும் சில மனிதர்களின் பிறப்பு நியதிகள் உடைக்கப்பட்டு மாற்றுப்பாலினத்தவர்கள் உருவாகுகிறார்கள். ஒன்று திரிந்து இன்னொன்றாக மாற்றம் பெறுகின்றது. இதுதான் அறிவியலும், விஞ்ஞானமும் கூறும் ஆணித்தரமான உண்மை“ இப்படி நூலின் அறிமுகப் பகுதியில் விளக்கம் கொடுக்கின்றார் திருநங்கை ஈழநிலா அவர்கள்.

என்னதான் மாற்றுப் பாலினத்தவர்கள் பற்றி நமக்கு தெரிந்திருந்தாலும், அவர்கள் சார்ந்த அறிவியல் விடயங்களோ, அன்றாட அவர்களின் சமூக முகம்கொடுப்பு விட்யங்களோ அநேகருக்கு தெரியாது என்பதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.
மாற்றுப் பாலினத்திலே திருநங்கை என்று ஒரு பாலினத்தை அறிவோம். ஆனால் திருநம்பியர் என்று இன்னொரு பாலினம் அதில் உள்ளதை அறிவோமா? இல்லையே. திருநங்கை ஈழநிலா அவர்கள் மாற்றுப் பாலினம் தொடர்பாக பன்முகப்பட்ட விடயங்களை, செய்திகளை ஒன்றாக்கி இந்த நூலினை தமிழ் உலகிற்கு தந்துள்ளார்.

இதைப் பருங்கள். இது “திருநம்பியர்கள்“ எனும் சிறு தலைப்பிலே நூலாசிரியர் கொடுக்கும் விளக்கத்தின் ஒரு பகுதி. “திருநம்பிகள் பற்றி நம் தமிழ் சமூகம் பெரிதாக அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனென்று கூறுகின்றேன் கேளுங்கள். திருநம்பிகள் என்பவர்கள் பிறப்பில் பெண்ணாகவே பிறக்கின்றார்கள். ஆனால் அவர்கள் சிறுவயது முதலே, தம்மை பெண்ணாக கற்பனை கூட செய்ய மாட்டார்கள். அவர்களின் நடத்தை, சிந்தனை, செயற்பாடு என எல்லாமே ஒரு ஆணையே பிரதிபலிக்கும். நம் தமிழ் சமூகங்களில் பெண்களுக்கென்று சில விழுமியங்கள், கட்டுப்பாடுகள், ஒழுக்க வரையறைகள் எல்லாம் இருக்கின்றன. இவையனைத்தும் பெண்ணடிமையின் படிக்கட்டுக்கள்..“ என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடரும் ஈழநிலா மேலும் இப்படிச் சொல்கின்றார், “பெண் உடலுக்குள் சிக்கிகொண்ட இந்த ஆணின் ஆத்மாக்கள் படும் வேதனை அவர்களளைப்போல் சிக்கித் தவிக்கும் இன்னொரு ஆத்மாக்களுக்கே தெரியும். பொதுவாக பெண்கள் தங்கள் வாழ்க்கையில் முதன்முறையாக சந்தோசம் அனுபவிக்கும் தருணம் அவர்கள் பூப்படையும் தருணம். ஆனால் இப்பெண்ணுடலில் இருக்கக்கூடிய இந்த மாற்றத்தால், பாலின ஆண்கள் அத்தருணத்தில் அதைக்கூற வெட்கப்பட்டு ஏங்கி, விம்மி உளவியல் ரீதியாக பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் தருணம் அது“ என்று கூறுகிறார்.

பார்த்தீர்களா? எம்மில் எத்தனை பேர்களுக்கு இவர்களின் இந்தப் பிரச்சினைகள் புரியும். இப்படி ஒவ்வொரு அம்சங்களிலும், நமக்குத் தெரியாதவற்றை நன்றே தன் எழுத்துக்களால் நகர்த்திச் செல்லுகின்றார், “மூன்றாம் பாலின் முகம்“ நூலினைப் படைத்த ஈழநிலா.

ஈழநிலா பற்றிய அறிமுகக் குறிப்பினை நூலின் பின் அட்டையில், செல்லமுத்து வெளியீட்டகம் இயக்குநர் யோ. புரட்சி வரைந்திருக்கின்றார். அக்குறிப்பில் “ஈழநிலா யாழ்ப்பாணத்தில் வசிப்பவர். பால்நிலை மாற்றத்தால் குடும்பத்திலும், வெளியிலும் வேதனை அனுபவிக்கும் விருட்சம் இவர். யாழ்ப்பாணம் கரையூர் இவரை கண்மலரச் செய்த ஊர். யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி இவருக்கு கல்வி ஊட்டிய அன்னை“ என்றும் ஈழநிலா பற்றிய சிறு பதிவு காணப்படுகின்றது.

இந்த நூலிலே மாற்றுப் பாலினத்தவர்களின் வேதனை நிலைகள் மட்டுமல்ல சாதனை நிலைகளும் சொல்லப்பட்டுள்ளன. “வரலாற்றுக் குறிப்புக்களில் திருநங்கையர்கள்“ எனும் தலைப்பில் அவை விரிந்து செல்கின்றன. கி.பி 50 முதல் 12 1ம் ஆண்டிற்குள் வாழ்ந்த திருநங்கை சாய்லூன் என்பவரே காகிதத்தினை கண்டுபிடித்ததாக ஒரு குறிப்பினை வரைந்திருக்கும் ஈழநிலா அவர்கள், அவர் சீனாவில் வாழ்ந்தமையை சுட்டுகின்றார்.

இதில் சோகமான விடயம் என்னவெனில். காகிதத்தினை கண்டுபிடித்த அவருக்கு அரசன் பதவி உயர்வு அளித்திருக்கின்றான். அதன் பின்னர் பலரால் அவர் வெறுக்கப்பட்டு, மனோநிலை பாதிக்கப்பட்டு இருந்திருக்கின்றார். இதன் விளைவாக அழகிய வஸ்திரங்களினை அணிந்து, விஷம் அருந்தி ஒரு தடாகத்திலே உயிரிழந்தார். இந்த விடயங்களினை பார்க்கின்றபோது முற்காலத்திலும் மாற்றுப் பாலினத்தவர்கள் பட்ட வேதனை புரிகிறதல்லவா?

நூலின் இடையிடையே கவிதைகளால் கருத்துக்கள் சிறப்பாகின்றன. கவிதைகள் மாற்றுப் பாலினத்தவர்களின் வேதனையை விம்முகின்றன. இவை தவிர மத நூல்களோடு ஒப்பீடு செய்யப்பட்டும் மாற்றுப் பாலினத்தவர்கள் சார்ந்த குறிப்புகள் வரையப்பட்டுள்ளன. இந்த நூல் மாணவர்களுகு மட்டுமல்ல மற்றோர்க்கும் தகவலறிதற் சான்று நூலாகும் என்பதில் ஐயமே இல்லை. எழுத்துசார் திருத்தங்களை இரண்டாம் பதிப்பில் கவனமெடுக்க வேண்டிய பொறுப்பு இந்த நூலின் வெளியீட்டாளர்களுக்கு உண்டு.

இந்த நூலானது “படைப்பாளிகள் உலகம்” அனுசரனையில் “செல்லமுத்து வெளியீட்டகம்” வெளியீடு செய்திருக்கின்றது.

“மூன்றாம் பாலின் முகம்” நூல் ஈழத்தில் மட்டுமல்ல, உலக அளவிலும் தனித்துவம் மிக்கதாய் தலை காட்டும்.

**யோ.புரட்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கோமகனின்**

# சுந்தரி

வேம்படியில் வாழ்ந்த வந்த தங்க வேலாயுதத்தாருக்கும் தெய்வானைபிள்ளைக்கும் மூத்த மகளாக பிறந்த கனக சுந்தரிக்கு நண்டும் சிண்டுமாக நான்கு தம்பிகளும் மூன்று சகோதரிகளும் இருந்தார்கள். தங்க வேலாயுதம் ஆசிரியர் தொழிலுடன் பதினைந்து பட்டி தோட்டமும் செய்துவந்ததால் அந்தப் பெரிய குடும்பம் ஓரளவு வசதியாக இருந்து வந்தாலும் ,யுத்தத்தின் கோரப்பிடியினுள் சிக்கிய அந்தக் குடும்பம் படிப்படியாக அதன் வளங்களை இழக்கத் தொடங்கியது. தங்க வேலாயுதத்துக்கு பிள்ளைகளின் எதிர்காலம் அவரை பயமுறுத்தியது. கனக சுந்தரி வேறு கலியாண வயதை எட்டி விட்டாள் .கனக சுந்தரியின் பலகலைக்கழகப் பட்டப் படிப்பும் முடிந்து விட்டிருந்தது .கடவுள் அவளது அழகில் எதுவித வஞ்சகமும் செய்வில்லை. .கனக சுந்தரியின் அழகில் மயங்காத பெடியளே வேம்படியில் இல்லை. .ஆனாலும் கனகசுந்தரிக்கு பேசிவந்த கலியாணங்கள் எல்லாம் அவளது செவ்வாய் குற்றத்தினால் தட்டுப்பட்டுக் கொண்டே வந்தன .

இது தெய்வானைப்பிள்ளைக்கு மனதளவில் பெரிய தாக்கமாக இருந்தது. இதன் தொடராக தெய்வானைபிள்ளை பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டாள். பாரிசவாதத்தல் பாதிக்கப்பட்ட தெய்வானைக்கு பிறகு கனகசுந்தரியிடமே குடும்ப பொறுப்புகள் வந்து சேர்ந்தன. கோழி தன்குஞ்சுகளை எப்படி பார்க்குமோ அப்படியே தேவசுந்தரி தனது தம்பி தங்கைகளை பொத்தி பொத்தி வளர்த்தாள்.

கோடைக்காலத்தின் ஓர் மாலைப்பொழுதில் புறோக்கர் சவரிமுத்து கனக சுந்தரிக்கு ஓர் குறிப்பை கொண்டுவந்தான். பிரான்ஸில் பிரெஞ் பிரஜையான மனோகரன் அண்மையில் தனது மனைவியை விபத்தொன்றில் பலிகொடுத்து இருந்தார். அவருக்கு சிறிய வயதில் இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். முக்கியமாக மனோகரன் தனக்கு எதுவித சீதனமும் வாங்கப்படாது என்று நிபந்தனை போட்டிருந்தார். அவருக்கு தேவை தனது சிறிய பிள்ளைகளைப் பார்பதற்கு ஓர் அன்பான அம்மா வேண்டும் அவ்வளவே . சவரிமுத்து இந்த சம்பந்தத்தால் வரப்போகும் நன்மைகளை தங்க வேலாயுதத்துக்கு எடுத்து சொன்னாலும், தனது மகள் இரண்டாம் தாரமாக ஒருவனுக்கு வாழ்க்கை படபோவதையிட்டு அவரின் மனம் கலங்கியது. கனக சுந்தரியோ அப்பாவின் பேச்சுக்கு எதிர் பேச்சு பேசாது மனோகரனை கலியாணம் செய்ய சம்மதித்தாள். அவளைப்பொறுத்த வரையில் இந்தக் கலியாணம் ஓர் லாப நட்ட கணக்கு அவ்வளவே. இந்த கலியாணத்தால் தனது சகோதரங்களின் எதிர்காலமே அவளுக்கு முக்கியமாக பட்டது. வேம்படியே வெப்பிராயத்தில் புகை கக்க மனோகரன் கனக சுந்தரியை கலியாணம் செய்து கொண்டார்.

கடுமையான பனிப்பொழிவு பொழிந்த ஓர் பனிக்காலப் பொழுதொன்றில் கனக சுந்தரியின் வருகை பிரான்ஸில் பதிவானது. இந்த சூழலை இயல்பாக்குவதற்கு கனக சுந்தரி நிறையவே போராட வேண்டி இருந்தது. அந்த போராட்டம் அவ்வளவு சுலபமாக அவளுக்கு இருக்கவில்லை. புரியாத மொழியும், முற்றிலும் மாறான வாழ்கை முறைகளும் அவளை திணறடித்தன.

காலம் செல்ல செல்ல பாரிஸின் நெளிவு சுழிவுகளை மெதுவாக பிடித்து கொண்டாள். காலம் லாவகமாக இரண்டு வருடங்களை முன்னோக்கி தள்ளி விட, கனக சுந்தரி மேலும் இரண்டு பிள்ளைகளுக்கு அம்மாவானாள். நான்கு பிள்ளைகளையும் ஒரு வித வித்தியாசம் இல்லாமலேயே வளர்த்தாள் கனகசுந்தரி. பிள்ளைககளை பராமரிப்பதற்கு அரசாங்கம் உதவித்தொகைகளை வழங்கியது. அத்துடன் வீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகையில் குறிப்பட்ட தொகை உதவிப்பணமாக வந்தது. இதனால் கனக சுந்தரிக்கு வேலைக்குப் போய் கடுமையாக உழைத்து வெட்டி அள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லாமல் போய் விட்டது. ஆனால் உதவித்தொகைகளால் வந்த பணத்தின் ருசி அவளை மெதுமெதுவாக வளைத்துக்கொண்டது. இலகுவான வழியில் பெரிய முதலீடு இல்லாமல் காசு பார்க்க கனகசுந்தரிக்கு காலம் ஓர் வழியைக்காட்டியது.
இந்த தொழில் இருக்கிறதே தமிழரின் பழமை வாய்ந்த
தொழில். அன்றாடம் காச்சிக்கு முழு நிலவு போல எட்டத்தில் நின்று அழகு காட்டும் காசை பலரின் சப்போர்ட்டுடன்
குறுகிய நேரத்தில் பெருமளவு காசை கிட்ட வைத்து பாக்கும் செப்படி வித்தைக் கலை இது. ஒருபக்கத்தில் தமிழரது சேமிப்பாக இருந்தாலும் இந்த சீட்டு தொழிலால் புலம் பெயர் தேசங்களில் பல குடும்பங்கள் சிக்கி சிதறி சின்னா பின்னாமானதுதான் மிச்சம். அதைவிட சீட்டு காசு கட்டப்பிந்தினால் அவர்களிடம் கேட்கும் கேள்விகளும் வில்லங்கமானவை. சில இடங்களில் மனைவிமாரையே படுக்கைக்கு அழைத்த சம்பவங்களும் இந்த பாரிஸ் பட்டினத்தில் நடந்து இருக்கின்றது. அநேகமான களவு றொக்கியெடுத்து இறக்கப்படும். ஒன்றில் காசு அல்லது கையை காலை எடுப்பதில் அந்த ஒப்பரேசன் முடியும்ஃ இதற்கென பூனை குறூப் என்றும் கறடி குறூப் என்றும் இரண்டு வகையான குறூப்புகள் (கொமாண்டோ ) அவளுக்கு இருந்தன. முதலில் பூனை குறூப்தான் ஏரியாவில் இறங்கும். இந்த குறூப் முதலில் வெருட்டல் மட்டுமே சமபந்தபட்டவருக்கு விடும். அதற்கும் மிஞ்சினால் கறடி குறூப் இறங்கும். கறடி வெட்டுக்கொத்து கேஸ் தான்.. ரத்தம் காணாமல் திரும்பாது. இதனால் லாச்சப்பல் ஏரியா பலதடவை ரணகளப்பட்டிருக்கின்றது. இந்த குறூப்புகள் ஏறத்தாள றோட்டு போடும் றோலர் போன்றவைதான். இவர்களுக்கு உள்ள இலக்கு என்பது விளைவுதான். இடையில் இருக்கும் எதையுமே இந்த குறூப்புகள் கணக்கில் எடுப்பதில்லை. பொது இடங்களில் சம்பந்தப்பட்டவர் கூனி குறுகி அவமானப்படுகின்றாரே என்பதெல்லாம் அவர்களுக்கு வேண்டாத கவலை. குறுக்கால் போகின்றவர்களுக்கு வெற்றி என்பது கிட்டவாக
தெரியலாம். அதை அவர்கள் தங்களது தனித்திறமை என்று பெருமிதப்பட்டும் கொள்ளலாம். ஆனால் அது நிரந்தர வெற்றி இல்லை என்பதை ஏனோ அவர்கள் மறந்து விடுகின்றார்கள்.

> நாங்கள் அங்கு சென்ற பொழுது ஓர் முப்பது பேர் அங்கு இருந்தார்கள் எல்லோருக்கும் ரீயும் வடையும் தந்தார்கள். சிறிது நேரத்தில் சீட்டு சுந்தரி அங்கு வந்தாள்.

கொலைகளுக்கு மூலம் தேடிப்போனால் இந்த சீட்டு
தொழிலே முக்கிய பாத்திரமாக இருக்கும். இருந்தாலும் இந்த தமிழ் சனங்கள் இருக்கிறார்களே இந்த சீட்டு கட்டுவதில் எவ்வளவுதான் ரிஸ்க் இருந்தாலும் இந்த சீட்டு கட்டுதலை அவர்கள் வெறுத்ததே கிடையாது. சீட்டுப்பிடித்தல் தொழில் கனக சுந்தரியை வலு சிம்பிளாக தன்னுள் இழுத்துக்கொண்டது . ஆரம்பத்தில் ஒன்று இரண்டு ஒன்று சீட்டுக்களைப் பிடித்த கனகசுந்தரி, காலப்போக்கில் ஒரே நேரத்தில் பல சீட்டுக்களை பிடிக்கும் முதலாளியாக்கி விட்டிருந்தது. காசே அவளின் குணத்தையும் தீர்மானித்தது. ஊரில் இருந்த தனது சகோதரங்களை பாரிஸ/க்கு கூப்பிட்டு நல்ல இடங்களில் கலியாணம் செய்துவைத்தாள் கனகசுந்தரி

நான்கு பவியோன்களை (வளவுடன் கூடிய தனி வீடு ) வாங்கிப் போட்டு, அதை எங்கடை சனத்துக்கு
எழுதாமல் வாடகைக்கு ( வரிகளில் இருந்து தப்ப ) விட்டாள். தானும் ஓர் பவியோன் வீட்டில் இருந்து கொண்டாள் .இப்பொழுது இருக்கின்ற பாரீஸ் சனங்களுக்கு கனக சுந்தரி "சீட்டு சுந்தரி " என்றே அறியப்பட்டாள்.
சீட்டு சுந்தரி எப்பொழுதும் கழிவு சீட்டுத்தான் பிடிப்பாள் .குலுக்கல் சீட்டில் பெரிய லாபம் இல்லை என்பது அவள் கணக்கு .முதல் சீட்டு தாச்சி மறிக்கும் அவளுக்கே போய்சேரும் அத்துடன் கொமுயுநிக்கேசன் செலவு என்று ஒரு தொகையை சீட்டு ஆரம்பிக்கும் பொழுது வாங்குவாள் .இதைவிட சீட்டு காசு கட்ட பிந்தினால் அதை கலெக்சன் செய்யும் முறையில் தான் சீட்டு சுந்தரி பாரிஸில் தனிமுத்திரை பதித்தாள். முதலில் அன்பாக பேசி பின்னர், மீற்றர் வட்டியில் தொடங்கி அதற்கும் மசியாமல் இருந்தால், சீட்டுசுந்தரியின் கொமாண்டோ படை களத்தில் இறங்கும். இந்த தரையிறக்கம் அனேகமாக லாச்சப்பலில் அதன் விளைவுகள் சந்ததிக்கும் ஆட்டிப்படைக்கவல்லன .

ஓர் வசந்தகால முற்பகுதியில் அம்மாவிடம் இருந்து எனக்கு ஓர் தொலை பேசி அழைப்பு வந்தது அக்காவுக்கு அவுஸ்திரேலியாவில் இருக்கும் ஓர் எஞ்சினியர் மாப்பிள்ளையின் குறிப்பு சரிவந்து கலியாணம் முற்றாகி விட்டது என்றும் ,நாப்பது லட்சம் காசும் வீடுவளவும் சீதனமாக மாப்பிளை பகுதி கேட்கின்றது என்றும் அம்மாவின் தொலைபேசி அழைப்பு சொல்லியது ..அக்காவுக்கு கலியாணம் சரிவந்தது சந்தோசமாக இருந்தாலும், சிமிக் ( அடிப்படை ) சம்பளத்தில் வேலைசெய்து, அறை வாடகை கட்டும் எனக்கு இந்த செய்தி உண்மையில் ஜவல் ( குளோரின் ) குடித்த மாதிரி இருந்தது. .என்னை நம்பி இவ்வளவு காசை யார் தருவார்கள்? என்ற எண்ணமே மண்டைக்குள் எந்தநேரமும் விறாண்டிக்கொண்டு இருந்தது. .வீட்டைப் பொறுத்தவரயில் நான் ஓர் தேவன். .இந்த தேவனால் முடியாதது எதுவும் இல்லை என்ற நம்பிக்கையை அம்மாவுக்கு வளர்த்துவிட்டேன். அம்மாவும் பாவம் யாரிடம்தான் போவா ? அப்பா இல்லாத இடத்தில் தேவன் பதவியை நான் நிரப்பிக்கொண்டேன். எனது சுகதுக்கம் எல்லாம் அம்மாவுக்கு இரண்டாம் பட்சம்தான். அம்மாவில் எனக்கு வெறுப்பு கொட்டிக்கிடந்தாலும், அம்மா இல்லாவிட்டால் நான் வந்திருப்பேனா ? என்ற நினைப்பே அம்மாவில் இருக்கும் வெறுப்பை கரைக்கப்பண்ணி விடும். இப்பொழுது வந்த அக்காவின் செய்தியும் அப்படியே இருந்தது.
ஒரு நாள் மாலை பொழுதொன்றில் நானும் என்னுடன் ஒன்றாக படித்த யோகேசனும் கபே பார் ஒன்றில் சந்தித்துக்கொண்டோம் வீதி ஓரத்தில் இருந்த மேசையில் இருந்து கொண்டு
கபேயின் வாசத்துடன் எனது மன வெப்பிராயமும் சேர்ந்து வந்து விழுந்தது . எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த யோகேசன் எங்கள் மற்றக்கூட்டாளி ரமணனுடன் சேர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பேரும் முப்பதினாயிரம் யூறோ சீட்டு பெரிய சீட்டாக பிடிப்போம் என்று சொன்னான் சொன்னதும் அல்லாமல் எனக்கு முன்னாலேயே சீட்டு சுந்தரிக்கு தொடர்பெடுத்து பெரிய சீட்டு இப்ப கட்டலாமா என்ற விபரத்தையும் எடுத்து விட்டான்.


ஒருநாள் மாலை நானும் யோகேசனும் ரமணனும் சீட்டு சுந்தரி வீட்டிற்கு போனோம். சீட்டு சுந்தரியின் வீடு பெரிய கேற்றுகளுடன் பிரமாண்டமாக இருந்தது. நாங்கள் அங்கு சென்ற பொழுது ஓர் முப்பது பேர் அங்கு இருந்தார்கள் எல்லோருக்கும் ரீயும் வடையும் தந்தார்கள். சிறிது நேரத்தில் சீட்டு சுந்தரி அங்கு வந்தாள். இப்பொழுது தான் சீட்டுசுந்தரியை முதன் முதலாக பார்க்கின்றேன். அழகென்றால் அப்படி ஒரு அழகு. பார்த்தால் நான்கு பிள்ளைகளுக்கு அம்மா என்று யாரும் சொல்ல மாட்டார்கள். இபொழுது எனக்கு விளங்கியது ஏன் சனங்கள் குறிப்பாக சீட்டு சுந்தரியிடம் சீட்டு கட்ட அள்ளுப்படுகின்றார்கள் என்று. சீட்டுசுந்தரி சீட்டு கூறும் அழகே அழகுதான். எல்லோருக்கும் நடுவில் சப்பாணி கட்டிக்கொண்டு இருந்து கொண்டு சீட்டை இவ்வாறு தொடங்கினாள் ," உங்கடை கஸ்ரங்களை குறைக்கவேணும் எண்டுதான் இந்த சீட்டை தொடங்கினான். மத்தும்படி வியாபாரரப் புத்தி எல்லாம் எனக்கு இதிலை இல்லை. உங்களுக்கு எவ்வளவு கஸ்ரம் இருக்கோ அந்தளவுக்கு இந்த சீட்டு முடியிற வரைக்கும் எனக்கும் கஸ்ரம் இருக்கு . சீட்டு முப்பதினாயியரம் யூறோ. கட்டு காசு ஆயிரம் யூறோ. முதல் சீட்டு தாச்சி மறிக்கிற எனக்குத்தான். செக்குகள் எடுக்கமாட்டன். எல்லாரும் காசாய் தான் தரவேணும். அடுத்த சீட்டு வாற மாசம் பத்தாம் திகதி கூறுவம்" என்று சொல்லி முடித்தாள் . நாங்கள் எல்லோரும் காசை சீட்டு சுந்தரியிடம் எண்ணிக்கொடுத்து விட்டு வந்தோம்.

சீட்டு சுந்தரியிடம் காசுகளை எண்ணி கொடுத்து விட்டு வந்ததில் இருந்து மனம் அலைபாய்ந்தது. எனது நம்பிக்கை அங்கும் இங்கும் டான்ஸ் ஆடியது. நம்பிக்கைதானே வாழ்க்கை. நான் இங்கு வரும்பொழுது இந்த பிரான்ஸ் என்னை வாழவைக்கும் என்று எந்த நம்பிக்கையில் வந்தேன் ?தேடலும் நம்பிக்கையும் ஒரு கோட்டில் வரும்பொழுது வெற்றி விளைவாக இருக்கும் .சீட்டு சுந்தரி நாணையமானவள் நாம் முதலில் நம்பகமாக நடக்க வேண்டும் அடுத்தமுறை என்ன கழிவெண்டாலும் எடுக்க வேணும். இந்த புள்ளியை வைத்து தான் நான் பெரிய வட்டங்களும் சதுரங்களும் கீற முடியும். மீண்டும் வீட்டில் இருந்து அம்மாவின் பாச அழைப்பு வந்தது . அது அக்காவின் சீதனக்காசிலேயே சுற்றி சுழண்டு கொண்டிருந்தது .மாப்பிள்ளை பகுதி கலியாணத்தை வருகிற மாத முடிவுக்குள் செய்ய நெருக்குகின்றார்கள் என்றும் இல்லாவிட்டால் கலியாணம் குழம்பி விடும் என்று அம்மா பதகளிப்பட்டா .அக்காவும் பாவம் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தன்ரை பிறப்பை நினைச்சு உள்ளுக்கை கவலைப்படும் .இடைக்கிடை நேர்ந்துவிட்ட ஆட்டுக்கு இப்படியான யோசினையள் இருக்க கூடாது என்று மனம் குறுக்கால் ஒரு அறு அறுத்தது . நான் பலவித மான குழப்பங்களுடன் நாட்களை கடத்திக் கொண்டிருந்தேன்.

எனது சம்பளத்தில் எடுத்து காசைக்கொடுத்ததால் சிக்கனத்தில் சிக்கனமாக இருக்க வேண்டியதாகிவிட்டது. ஒன்றிற்காக ஒறுத்தலிலும் இன்பம் இருக்கத்தான் செய்கிறது.அடுத்த நாள் சீட்டு எடுக்கிற நாள் என்பதால் அன்றைய பொழுது எனக்கு பதட்டமாகவே இருந்தது. யாரும் சீட்டை வேணுமென்று ஏத்தாமல் விட்டாலே காணும். இதற்காகவே யோகேசனை கொண்டு எல்லாரையும் சரிக்கட்டி இருந்தேன். அடுத்தநாள் வேலையை முடித்துக்கொண்டு பசிக்களையுடன் சீட்டு சுந்தரியின் வீட்டுக்குப் போனேன் .நான் வந்து இறங்கிய மெத்றோ ( பாதாள புகையிர நிலையம் ) வாசலில் இருந்து சீட்டு சுந்தரியின் வீடு பத்து நிமிடங்களுக்கு மேலாக நடக்க வேண்டும் .நான் றோட்டு சந்தியால் சீட்டு சுந்தரியின் வீட்டுக்கு திரும்பிய பொழுது தூரத்தே றோட்டு முழுக்க பொலிஸ் நிற்பது தெரிந்தது சிவிலில் இருந்த நான்கு வெள்ளைகள் தங்கள் அடையாள அட்டையை காட்டி எனது விசாவை பரிசோதிக்க தொடங்கினார்கள். மற்றையவர்களது கைகள் என்னை பக்கத்தில் இருந்த சுவரில் பின்புறமாக சாய்த்து வைத்து எனது உடம்பில் ஊர்ந்தன .

# நகரும் கற்கள்

நகரும் கற்கள் அல்லது அலையும் கற்கள் அல்லது நகரும் பாறைகள் [Sailing stones) என அழைக்கப்படுவது கற்கள் அல்லது பாறைகள் மனிதனதோ அல்லது எந்தவொரு விலங்கினதோ தலையீடின்றி ஒரு நீண்ட நேரான பாதைக்குத் தடத்துடன் நகரும் ஒரு நிலவியல் தோற்றப்பாடு ஆகும். இத்தகைய சம்பவங்கள் ரேஸ்ட்ராக் பிளாயா, சாவுப் பள்ளத்தாக்கு போன்ற இடங்களில் பதிவு செய்யப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன. இத்தகைய இடங்களில் கற்கள் நகர்ந்ததற்குரிய சுவடுகளும் நகர்ந்த கற்களும் நிழற்படமாகப் பிடிக்கப்பட்டுள்ளன. கற்களை நகர்த்தும் விசை எதுவென்பது இதுவரை அறியப்படாத ஒன்றாக உள்ளது, எனினும் இதனைப் பற்றிய ஊகங்களும் கோட்பாடுகளும் உலாவுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகோர்த்திடவா தோழி

வாணமதி.



காலம்காலமாக பெண்கள் தினம் உலகநாடுகள் யாவற்றிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஆனால் அதற்கான அங்கீகாரம் கிடைத்த பெண்களுக்கு அன்றைய தினம் மாதவமே.
ஆனால் படித்தவர் தொடங்கி பாமரப் பெண்கள் வரையில் நிமிடத்துக்கு நிமிடம் பிறப்பின் அர்த்தம் என்ன வென்று தமக்குத்தாமே கேள்வி கேட்டு உளவியல் ரீதியில் சோர்ந்து போவது குறையவில்லை என்றுதான் கூறவேண்டும். அதற்கான வாழ்வியல் சூழ்நிலை ஒரு காரணம் என்றாலும், வழிவழியாக தொடர்ந்து கொண்டிருக்கும் ஆணின் பலமும் பலவீனமும் சார்ந்த அழுத்தமே அதிகம் எனலாம்.ஒரு ஆணின் பலம் அவனது உடலமைப்பு, அவனது பலவீனம் பெண்கள் பல்துறையிலும் முன்னேற்றமடைந்து செல்வதனை ஏற்றுக்கொள்வதில் காட்டும் தயக்கமும் புறக்கணிப்பும் இயல்பாக உள்ளது.

சிலர் சொல்லலாம் அதெல்லாம் இப்போது மாறிவிட்டது என்று, ஆனால் மாறவில்லை அதிகரித்துக்கொண்டுதான் வருகிறது. மாறாக அவர்களது அழுத்தங்களை எதிர்க்கொள்ளும் மனவலிமை பெண்கள் மத்தியில் பன்மடங்கு அதிகரித்து விட்டது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் கண்ணைக் கசக்கி கழுத்தில் தூக்குப்போட்டுக் கொள்ளும் பெண்கள் மலையேறிவிட்டார்கள்.ஆண்களின் உழைப்பைத் தாங்கி ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த பெண்கள் அவர்களது அடாவடித்தனங்கள் யாவற்றுக்கும் கண்ணீரால் பதிலளித்தனர். அந்தக்காலம் இறந்தகாலமாக மாற்றமடைந்து விட்டது எனலாம்.

ஒரு பெண்ணின் உடலமைப்பு மென்மையாக இருக்கும் பட்சத்தில் அவளது ஆளுமையும் அப்படியே இருக்குமென சொல்லிச்சொல்லி தன்னைத்தானே உணர்ந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பினை இருட்டடிப்பு செய்தனர். காலப்போக்கில் நான் யாரென தன் பிம்பத்தைப் பார்த்து கேள்வி கேட்கையில் தன் அறியாமைக்காக நாணிக் குனிந்தாள். அன்றுதான் புரிந்தது அச்சம் ,மடம் நாணம், பயிர்ப்பு என்பதன் அர்த்தம்.சுருண்டு படுத்த நாகம் படமெடுத்தாற் போல தனது வீரியத்தை பல் துறையிலும் இன்றுவரை நிலைநாட்டி வருகின்றாள்.இதனை ஜீரணிக்க முடியாத ஆண்கள் தமது உடல் பலத்தால் அவளை அடக்கப் பார்க்கின்றனர். அவனது நோக்கம் அவளது ஆளுமையை சிதைப்பதும் அதனூடாக அவளது வேகத்தை தடைப் படுத்துவதுமே. இதனால் குறுகி குற்றுயிராகவும், உயிரற்ற உடலங்களாகவும் ஆன பெண்களின் விகிதாசாரம் அதிகமாக இருந்தது. ஆனால் காலவோட்டத்தில் அதனையும் தாங்கிக்கொண்டு எழுகின்ற பெண்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காகி விட்டது. அதன் விளைவு அவளை நாசம் செய்து மிருகத்தினைப் பார்க்கிலும் கொடூரமாக கொலை செய்கின்ற ஆண் வெறியர்கள் உருவாகிவிட்டார்கள். இதற்கு துணைபோகும் இழிபிறப்புப் பெண்கள் பலரும் உண்டு என்பதனை இந்த இடத்தில் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்."தலைகுனிந்த பெண்கள் கையெடுத்து கும்பிடும் தெய்வங்கள்" என்று இல்லாத ஒன்றை இருப்பதாக காரணம் காட்டி மயக்கமான வாழ்வியலை பெண்களுக்கு பரிசளித்துவிட்டு சுயநலத்தின் ஜீவிகளாக சுதந்திரமாகத் திரியும் இவர்களை என்னவென்று சொல்வது. இவர்களை எந்தப்ப பெண்ணாவது நேர்கொண்ட பார்வையில் கேள்விகள் கேட்பாள் என்றால் , அவளை இந்த சமூகம் தரங்கெட்டவளென்றும், தமிழர் கலாச்சாரத்தின் கலங்கமெனவும் முத்திரை குத்துகின்றனது.

இதற்கெல்லாம் பயந்து ஒடுங்கும் பெண்கள் மருகிவிட்டனர் என்றே கூறவேண்டும்.கலாச்சாரத்தின் அடித்தளமாக விளங்கும் இந்தியாவில் இன்று விவாகரத்து கேட்கும் வீதம் அதிகரிக்கத் தொடங்கி விட்டது. சட்டப்படியான விவாகரத்தை விரும்பாத பெண்கள் தமக்கான சட்டத்தைத் தாமே கையில் எடுத்துக்கொண்டு ஒரு கூரையின் கீழ் தனித்துவமாக வாழும் எண்ணிக்கை இலைமறைக் காயாக பலமடங்கு அதிகரித்து கொண்டுவருகிறது. ஓர் ஆணைப்போல் அல்லாது ஒரு பெண் தனது நலனை மட்டுமே நோக்காது தம்மைச் சார்ந்தவர்கள் நலனை நோக்குவதும் காரணமாக இருக்கலாம்.

ஆனால் ஐரோப்பா வாழ் பெண்களின் நிலை தலைகீழானது. இவர்கள் சிறுவயது முதல் ஆணுக்கு நிகராக வளர்கப்படுவதாலும், தனித்துவமாக இயங்கக் கற்றுக் கொள்வதாலும் தமது நலனை அதாவது தம் உணர்வுகளை, ஆளுமையைச் சிதைக்கும் எதனையும் யாருக்காகவும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.ஆணுக்கான இயக்கம் ,பெண்ணுக்கான இயக்கம் இரண்டும் சரி நிகரே என்ற கொள்கையில் வாழ விரும்பும் இவர்கள் குழந்தையைச் சுமக்கும் தமக்கு தரவேண்டிய சட்டப்படியான உரிமைகள் அதிகமே என வாதிட்டு வெற்றி கண்டுள்ளனர்.ஆனால் நமது நாடுகளில் ஓர் ஆணால் பெண்மை என்பதை விரசமாகவே பார்க்கப்படுகிறது.

கவர்ச்சிப் பொருளாகவும் தனது கழிவகற்றலுக்லான குப்பைத் தொட்டியாகவும் நோக்கும் ஆண்களின் மனோநிலை மாறவேண்டும். முன்பின் தெரியாத ஒரு பெண்ணை சக தோழியாக பார்க்கும் மனோநிலை ஒரு ஆணுக்கு வருமானால் பெண்களுக்கான தினத்தை மகுடமாக்குவது அவர்களாகத்தான் இருக்க முடியும்.!



படஉதவி

சுரதா ஜேர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் புடவை

விடிந்த பின்னும்
விழி மூடி திண்ணையில் கிடக்க
முத்தம் கூட்டி
நித்தம் நீர் தெளிக்கும்
அன்னை
நிலை குலைந்து
கிள்ளித் தெளிக்கும்
நீர் துளி
தெறித்து
என் முகம் பட
முந்தானை கொண்டு
முகம் துடைத்து
என் பேச்சை சந்தோசமாய்
இரசித்து நிக்கும்
நினைவு வெட்கி
குனிய வைகின்றது

அடி வயிற்றில்
அனலாய் கொதிக்கும்
விரக்தி
அங்காடி முடிவில்
அதை பெருக்கி
நீர் கொண்டு கழுவி
சுத்தம் செய்து
தெப்பலாய் நனைந்தும்
தீர்வதாய் இல்லை
தின கூலியில்
என் வாழ்வை
இந்த புலத்தில்
களித்திடும் போது


தினமும் தொலைபேசியில்
கெஞ்சும் அன்னை
கேட்டு நிப்பாள்
அப்பன் உனக்கென்ன
இன்கிருந்தனுப்பவென

அம்மா
நீ உடுத்து கழட்டிய
ஊத்தை புடவை ஒன்றை
அனுப்பிவிடு
அந்த புடவையில்
என் முகம் புதைத்து
ஒரு சிறு தூக்கம் ஏனும்
துக்கம் மறந்து
துயில்கின்றேன்

*பவாநந்தன், பிரான்ஸ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலன்

# தமிழ் தேசத்தின் போராட்டம் எங்கு நோக்கி ?

இலங்கையில் இரண்டு ஆற்றல்வளம் கொ்ண்ட தேசிய இனங்களின் தேசத்தின் வளர்ச்சி தேசிய இனமுரண்பாடுகளை வளர்த்து வந்துள்ளது. தன்னிடையே உள்ள அகமுரண்பாடுகளை உடைத்துக் கொண்டு முன்னேறிக் கொண்டுவந்துள்ளது. அகமுரண்பாட்டிற்கான மூலக்காரணம் அது தொடர்ந்தும் தன்னை பாதுகாக்க முடியாத காரணத்தினால் உடைகின்றது. அதாவது சாதியக் கட்டமைப்பை பாதுகாக்கக் கூடிய உற்பத்தி முறை சிதைவிற்கு உட்படுகின்றது. இவ்வாறு உற்பத்திக் கட்டமைப்பு உடைகின்ற போது பொதுப் போக்கை நோக்கி நகர்கின்றார்கள். இவ்வாறு முன்னேறி வளர்ந்த போராட்டம் என்பது முள்ளிவாய்க்காலில் ஆக்கிரமிப்பு உள்ளாகியிருக்கின்றது. குற்றுயிரும் குறை உயிருமாக இருக்கின்றதை முற்றாக நசுக்விட பல முனைகளில் இருந்தும் முனைப்புக் காட்டப்படுகின்றது.

இன்று தேசிய இனப்பிரச்சனைக்கு பல வியாக்கியானங்கள் கொடுக்கப்படுகின்றது. தலித்தியவாதிகள் “தேசிய உணர்வாக ஆதிக்க சாதித் தேசிய நலனே தனது தமிழ்த் தேசியம் என வடிவப்படுத்தி இயங்கி வந்தார். பின்வந்த ஒவ்வொரு தலைமையும், ஆரம்பத்தில் முற்போக்கு தேசியக் கோரிக்கைகளை முனவைத்தாலும் காலகதியில் தாமும் ஆதிக்க சாதி நலனை வென்றெடுக்கவே முயற்சிப்பதை வெளிப்படுத்தினர்.““ இவ்வாறான பரிதாபமான கருத்துக்களை முன்வைக்கின்ற போக்கு என்பது தமிழ் தேசத்தின் வளர்ச்சிப் போக்கை சிதைக்கும் போக்காகும். இது அடிப்படையில் தேசியஇனப்பிரச்சனைக்கான காரணத்தை வேறு எங்கோ தேடுகின்றார்கள். இவர்கள் அடிப்படையில் வேளாளர்களின் நலனே தமிழ் தேசியம் என்று வேறு சொல்லாடல்க்ளில் நிறுவ முற்படுவது கருத்துருவாக்கிகளுக்கான இவர்கள்1. தலித்தியம்பேசுபவர்கள்2. இரட்டைத்தேசியம்(தலித்தியத்தின்கள்ளக்குழந்தை)3. ஒத்தோடிகள்4சிங்களபெருந்தேசியத்தின் பாதுகாலவர்கள் 5. இடதுசந்தர்ப்பவாதிகள் (அகநிலைவாதிகள்)காரணம் தமிழ் சமூக உருவாக்கத்தில் இனக்குழுமங்களின் எச்சங்கள் என்பது வெவ்வேறு வடிவத்தில் இருந்து கொண்டு வருவதும் அவைகளை வைத்துக் கொண்டு பிரச்சனைக்கான காரணத்தை உற்பத்தி முறையில் இருந்து அணுகாது. மேற்கட்டுமானத்தில் இருந்து அணுகுவதன் தவறு தலித்தியர்கள், சிங்கள பெருந்தேசிய வெறியர்களால் முன்வைக்கப்படுகின்றது. முதலாளித்துவத்திற்கு முன்னைய சமூகச் சிந்தனை (இனக்குழுமம்- நிலப்பிரபுத்துவ ) வாழ்வின் வெளிப்பாடுகள் தொடர்ச்சியாக முதலாளித்துவ சமூகத்திலும் தொடர்கின்றது. இங்கு அந்த சிந்தனை வடிவம் (Subjective)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவுணர்சு சார்ந்த போலியுணர்வுக்குரியதாக இருக்கின்றது. சமூகத்தின் சிந்தனை வடிவங்கள் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றது என்ற புரிதல் என்பது அவசியமானதாகும். நாம் சமூகத்தின் முன் புத்திஜீவிகளாக பிரகடனப்படுத்துகின்ற போது அடிப்படையில் சமூகவிஞ்ஞானப் பார்வையில் சமூகத்தினை பார்க்க முயற்சிக்கின்றோமா என்ற கேள்வி அடிப்படையாக இருக்கின்றது. உற்பத்தி உறவு - உற்பத்தி சக்திக்கு மேல் கட்டப்படும் பழைய உற்பத்தி முறை சிதைக்கப்பட்டும் ஆனால் அதன் பழைய சிந்தனை வடிவம் தொடர்ந்து கொண்டிருக்கும். (இதற்கு இன்றையப் பொழுதில் மக்கள் பெரும்திரளின் கூட்டு வடிவத்தில் இருந்து உருவாகின்றது. இது இனக்குழுமத்தில் இருந்தும் அது கடந்து நிலமானிய சிந்தனையில் இருந்தும் மாறுபட்டு முதலாளித்துவ சிந்தனையில் நுழைகின்றது.

இங்கு இனக்குழும- நிலமானிய சிந்தனை முறைகளின் எச்சங்கள் என்பது சமூகத்தின் தீங்கான பொதுவுண்மையாக அரசியலுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

இனக்குழும- நிலமானிய முறைக்கு உட்பட்ட (taboo -socially stigmatized) மனிதர்களை பிரிக்கின்றது, அடக்குகின்றது, வளர்ச்சியை தடுக்கின்றது. இவற்றை உடைத்துக் கொண்டு

**மனிதர்களில் இருக்கும் போலியுணர்வு ( சிந்தனை, மனக்கசப்பு, உலகம் பற்றி புரிதல் இது இனக்குழும வாழ்வியல், நிலமானிய வாழ்வியல் சிந்தனைகளின் தொடர்ச்சியாக இருப்பது- சாதியுணர்வு, மத உணர்வு, பிரதேச உணர்வு என விரிந்து செல்கின்றது.**

அவசியமானது புதிய கலாச்சாரப் புரட்சிதான் என்று தீர்வாக முன்வைக்கப்படுகின்றது. இதனை மறைத்துக் கொண்டு புதிய வியாக்கியானம் கொடுக்கப்படுகின்றது). இதனை அக முரண்பாடு எனலாம் இது எம்மிடம் உள்ள மனக்கசப்பு கருத்துமுதல் வாதம் - மனிதர்களில் இருக்கும் போலியுணர்வு ( சிந்தனை, மனக்கசப்பு, உலகம் பற்றி புரிதல் இது இனக்குழும வாழ்வியல், நிலமானிய வாழ்வியல் சிந்தனைகளின் தொடர்ச்சியாக இருப்பது- சாதியுணர்வு, மத உணர்வு, பிரதேச உணர்வு என விரிந்து செல்கின்றது. இவ்வாறு பல விடயங்களை உள்ளகியிருப்பதுமாகும். இதன் இன்னொரு வெளிப்பாடு பிரதேசவாதமாகும் இது centric- மையவாதம்- இது யாழ்மையவாதம் என்பது நிலமானிய சிந்தனை அடித்தளமாக இருக்கின்றது. அமெரிக்க அடிமைகளின் விடுதலை என்பது சும்மா சாத்தியமாக்கவில்லை. வடக்கு அமெரிக்கா முதலாளித்துவ வளர்ச்சியை நோக்கியதாகவும் தென் அமெரிக்கா நிலவுடமைச் சமூகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த வேளையில் அடிமைகளை விடுதலை செய்வதன் ஊடாக வட-தென் முரண்பாடு என்பது தீர்வுக்கு வந்து ஐக்கிய அமெரிக்க இராச்சியமாக பரிணமித்தது. இங்கு இரண்டு பிரதேசங்களின் நலன் என்பதாக சுருக்கிப் பாத்துவிட முடியுமா? அவ்வாறு centric - மையவாதம்- என்று எடுத்திருந்தால் அடிமை-களை விடுதலை செய்ய ஆபிரகாம் லிங்கனால் முடிந்திருக்காது. காரணம் வடக்கு அமெரிக்க நலன் என்பது சுதந்திரமான உழைப்பாளிகளை வேண்டியிருந்தது. இங்கு வர்க்க வளர்ச்சியில் தேசிய இயக்கங்கள் உருவாகின்றது. இது குறிப்பிட்ட காலத்தில் தரகு வர்க்கம் தலைமை தாங்கியதுதான். ஆனால் இது பின்னர் இளைஞர்களால் (குட்டிமுதலாளிய) கைக்கு மாறியது என்பது வரலாற்றுத் திருப்பம்.

இங்கு சிந்தனை வடிவம் என்பது தனிமனிதர்கள் தீர்மானித்துக் கொள்வதில்லை. அது வாழ்நிலையே அதனை தீர்மானிக்கின்றது. அதேபோல அகமுரண்பாடுகள் சமூகத்தினை தீர்மானிப்பதில்லை. மாறாக புறநிலை (objecitve) என்பது பொருளாதார உறவுடன் கூடித்தீர்மானிக்கின்றது. இது முதலாளித்துவ கட்டத்திற்கு தேசிய இயக்கங்கள் வளருகின்ற காலமாகும்.உயர் வர்க்கத்தின் வெளிப்பாடாக இப்போதும் தமிழ்த் தேசியம் பேசுவோர் இந்த உண்மையைக் காண மறுப்பது என்று தமிழ் தேசத்தின் போராட்டத்தினை குறுக்கிவிடுகின்றார்கள். இதுதான் தமிழ் தேசத்தின் போராட்டத்தை வேளாளியத்தினுள் இணைத்து திரித்துவிடும் போக்காகும்.அகநிலையில் அமைந்த போக்கு எவ்வாறு சவாலுக்கு உட்பட்டதோ அதே போல தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முன்னைநாள் விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புக்களின் போக்குமாகும். மக்கள் தமது தேவைகளுக்காக அன்றாடம் போராடிக் கொண்டு தான் இருக்கின்றார்கள். அவர்களின் தேவையை அறிந்து போராட்டத்தினை முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையில் தான் இருக்கின்றது. ஆனால் இவைகளை மறுதலித்துக் கொண்டு ஏனோதானே என்று ஆண்டைகள் எவ்வாறு அடிமைகளை நடத்துவார்களே அவ்வாறே கீழ்தரமாக நடத்துகின்றார்கள். புலம்பெயர் அமைப்புகள் தமது தோல்வி மனப்பான்மையை திசைதிருப்புவதற்காய் லொபி, இணக்க அரசியலை மேற்கொள்கின்றார்கள். இவைகளே இன்றுள்ள பெரும் சவால்களாகும்.ஒடுக்கப்படும் மக்களின் உரிமையை அங்கீகரிக்கக் கோருவதும் அவ்வாறு அங்கீகரிக்காவிடின் தமது இறைமையை, முடிவை தீர்மானிக்கும் வகையில் சர்வசன வாக்கெடுப்பைக் கோரும் போராட்டத்தினை நோக்கி நகர வேண்டியுள்ளது. இதுதான் எம்முன்னால் உள்ள வேலைமுறை-யாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாலினியுடனான வண்ணாவின் சமகால இலக்கியக் கருத்தாடல்



13வயதில்ஓர்சிறுகதைப்போட்டியில் பரிசுச்சிறுகதையுடன் ஆரம்பித்த இவரின் எழுத்துப்பயணம் தொடர்ந்து இலங்கையின் பிரபல பத்திரிகைகள்,சஞ்சிகைகளில் சிறுகதைகள், தொடர்கள்,கவிதைகளென வெளியாகி இருந்ததுடன் மூன்று நாவல்களையும் படைத்துள்ளார்.மேலும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் நாடகங்கள்,கவிதைகள் இசையும் கதையுமெனப் பரவி,ஐரோப்பியமண்ணிற்கு புலம்பெயர்ந்த பின்னரும் ஐரோப்பாவின் தமிழ் பத்திரிகைகள்,சஞ்சிகைகள் வானொலியென்று புலம்பெயர் ஈழத்து இலக்கியப்பரப்பிலும் பங்காற்றி வருகின்றார்.இதற்காகப் பல போட்டிப் பரிசில்களையும்,ஐரோப்பிர அளவில் நடைபெற்ற போட்டிகளில் இருமுறை தங்கப்பதங்கங்களையும் பெற்றுக்கொண்டவராவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வணக்கம்**

**பரீசில் இருந்து வெளிவரும் முகடு இலக்கியச் சஞ்சிகைக்கான நேர்காணல் ஒன்றுக்காக வந்திருக்கிறோம். உங்களைப்பற்றிய ஓர் அறிமுகம் தரமுடியுமா?**

என்னைப் பற்றி என்றால் நீங்கள் எந்த விதத்தில் கேட்கிறீர்கள்? எழுத்து வழியிலான அறிமுகம் போதுமே தனிப்பட்ட அறிமுகத்தைக் குறைப்போமா?

**எழுத்து, இலக்கியம் போன்ற துறைகளில் உங்களுக்கு எப்படி ஈடுபாடு வந்தது ?என்று சற்றுக்கூறுங்கள்**

வீட்டில் உள்ளமூத்தவர்கள் இந்தத் துறைகளில் இல்லாமல் இருந்தாலும் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தார்கள். அது தவிர எங்கள் ஊர், எப்போதுமே வருடா வருடம் இலக்கிய நிகழ்வுகள் போட்டிகள் என்று அவைகள் சின்னவயதிலேயே ஏற்படுத்திய ஆர்வம், அதைவிட இயல்பாகவே எனக்குள் இருந்த ஆர்வம், பாடசாலை ஆசிரியர்ககளின் ஊக்குவிப்பு. .... என்னால் எழுத முடியுமா என எனக்கே தெரியாத காலத்தில் என் ஆரம்ப எழுத்துக்களுக்கு அடித்தளமிட்டு என்னை எனக்கு உணர்த்தியவர்கள் இருந்தார்கள் . ஹ்ம் அதற்குப் பின்னால் அந்தத் துறையில் ஓரளவு பிரபலமாக இருந்த சிலரின் வழிநடத்தல்கள் தான் என்னை வளர்த்தது.

**நீங்கள் ஊரில் இருந்த காலங்களில் போது பத்திரிகைகள் , மற்றும் இலத்திரனியல் ஊடகங்களோடும் தொடர்புகள் இருந்திருக்கிறது. நாடகங்கள் , கதைகள் , மற்றும் பலவேறுபட்ட இலக்கியத்தளங்களிலும் பணியாற்றி இருக்கிறீர்கள் அப்படிப் பார்க்கும் போது பத்திரிகைத் துறையில் உங்கள் அனுபவங்கள் பற்றிச் சொல்லுங்கள்?**

பத்திரிகைத்துறையில் அனுபவம் என் பதின்மூன்றாவது வயதில் தொடக்கி இருக்கலாம்.அதற்குப்பின்னால் வானொலி தான் ஆரம்ப காலங்களில் அதிகம் வளர்த்தது. அதற்குப் பிறகு யாழ்ப்பாணத்தைவிட்டுபெயர்ந்து கொழும்பில் இருந்த காலங்கள் கூடுதலா வீரகேசரி தினக்குரல் இவைகள் தான் என்னை வளர்த்தன. முக்கியமாக் அதில் ஒருவரை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும் காலஞ்சென்ற திரு பொன். ராஜகோபால் அவர்கள். எனக்கு மட்டுமல்ல நிறைய இலக்கியவாதிகள் எழுத்தாளர்களுக்கு மிகவும் ஆதரவாக வழிநடத்தக் கூடிய ஒரு தந்தை மாதிரி இருந்தவர் என்று சொல்லலாம். வீட்டில் இவைகள் வெறும் ஜனரஞ்சகப்புத்தகங்கள் இதை வாசிக்காதே என்று அறிவுறுத்திய காலங்களிலும் அந்த இளமைக்கால வயது அவைகளை வாசிக்கத் தூண்டிக் கொண்டிருந்தது எனக்கு அவர்கள் சொல்வதைக்கேட்க வேண்டும் என்று கூடத் தோன்றாத காலம் அவைகளை எல்லாம் உரிமையுடன் பறித்து குப்பையில் போட்டு சரியான வழியில் வழிநடத்தியவர் அவர் தான். அதற்குப் பிறகு என் தமிழாசிரியர். அதாவது நான் தமிழை பாடசாலைக் கல்வியாகக் கற்றதை விட தனிப்பட்ட முறையில் கற்றிருகிறேன். அவர் இப்போது உயிடுடன் இல்லை. மட்டுமில்லை அது தவிர எந்த ஒரு ஊடகத்திலும் அவரது பெயரைச் சொல்ல நான் விருப்பப்படவில்லை.

**பத்திரிகையில்உங்களை எழுதத் தூண்டிய காரணிகள் என்று எதைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறீர்கள்? அதற்கு உங்களை ஊக்குவித்தது ஏதாவது இருக்கும் தானே?**

சமூகப்பிரச்சனை.அதாவது சமூகத்தில இருந்த சில பிரச்சனைகளை ஒரு எதிர்த்து ஒரு கூட்டத்தின் முன் சரியாகக் கதைக்கத் தெரியாத வயது.
ஆனாலும் அவைகளை மனம் ஏற்கவில்லை என்னும் போதுஒரு கூட்டத்தின் முன் கதைப்பதை விட ஊடகங்கள் மூலம் கதைப்பது இலகுவாக இருந்தது. என்வயதைக் காரணப் படுத்தி என் கருத்தை அடக்கி ஒடுக்காமல், உங்களை அது சென்றடைய வேண்டும் எனக்குதிருப்பி நீங்கள் நேரடியாக எதிர்ப் பதில் சொல்ல முடியாத ஒரு ஊடகத்தில் கதைப்பது எனக்கு இலகுவாக இருந்தது.
அப்படியல்ல.கேள்விகள் வந்து சரியான பதில்களுக்காகவோ சரியான விளக்கங்களுக்காகவோ கேட்கப்படுதல் என்பது வேறு. இந்தக் கருத்தையே அமுக்கவேண்டும் என்பதற்காகக் கேட்கப்படும் விதண்டாவாதக் கேள்விகள் வேறு .அந்த வயது

**அதாவது நீங்கள் சொல்லவேண்டும் . ஆனால் கேள்வி கேட்காமல் அவை ஏற்றுக்கொள்ளப் படவேண்டும் அப்படியா?**

வந்து எனக்கு பெரியவர்களைத் தனியாக எதிர்த்து நின்று கதைக்க முடியாமல் இருந்தது ஒரு காரணம். பொதுவா ஒரு விதவாவிவாஹம் நடக்கிறதெனில் நான் அதை அப்போது நூறு வீதம் ஆதரிப்பேன். அந்தக் காலச் சமூகம் அதை நூறு வீதம் ஆதரிக்காது. ஒரு பெண் தப்புச் செய்தாள் என்றால் அதை நீங்கள் பார்க்கவில்லை எனும் போதோ அல்லது
அது உங்களைப் பாதிக்கவில்லை எனும் போதோ நீங்கள் அதைப்பற்றி விமர்சிக்க எந்த வித உரிமையும் இல்லை. அதை நான் நின்று அந்த வயதில் அதாவது ஒரு பதினாறு பதினேழு வயதில் சொல்லியிருப்பேன் என்று சொன்னால் நீங்கள் என்ர பெயரில களங்கம் கற்பித்திருப்பீர்கள். காரணமில்லாமல், காரணத்தோடு பாதிக்கப்படுதல் வேறு. காரணமில்லாமல் உங்கள் வாய்களாலேயே பாதிக்கப்படும். இது நீங்கள் செய்வது பிழை என்று நாள்கு பேருக்கு முன்னால சொல்வதை விட நாட்டுக்கு தெரியக் கூடியதா சொன்னன்

**இதனால் வரும் விமர்சனங்களை நீங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துணிந்து ஏற்றுக் கொண்டீர்களா?**

ஏற்றுக் கொண்டிருக்கிறேன் .பத்திரிகையில் வந்த விமர்சனங்களுக்கு நான் பதிலளித்திருக்கிறேன்.பத்திரிகைத் துறைக்கும் அது தெரியும். பத்திரிகையில் ஒரு விமர்சனம் வரும்போது அது சரியான மொழிவடிவத்தில் வரும்.
நேரடியாகக் கேட்பவர்கள் கொச்சை வார்த்தைகளிலும் கேட்பார்கள். கொச்சை வார்த்தை எதற்கும் நான் எப்போதுமே பதில் சொல்ல மாட்டேன் . அதனால் அதை நான் விரும்பவில்லை.

**பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருந்திருக்கிறீர்கள். பத்திரிகைகள் வந்து ஒரு நடுவு நிலைமையாக, நெஞ்சுரமாக நீதியோடு செயற்பட்டிருக்கின்றனவா?**

இப்போது இருக்கும் வசதிகளை விட நான் இலங்கையில் இருந்த காலத்தில் ஊடக வசதிகள் பத்திரிகைகள் குறைவாக இருந்தன. தங்கள் வருமானத்திலும் கவனம் செலுத்த வேண்டிய தேவைகள் இருந்தன. அதொரு பாதுகாப்பற்ற சூழ்நிலை காலப்பகுதி என்பதால் பத்திரிகைச் சுதந்திரம் அதிகளவில் இருக்கவில்லை அவர்கள் தங்கள் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டி இருந்தது. அதனாலும் சில விடயங்கள் எதிராக எழுதவில்லை என்றாலும் பிரசுரிக்கத் தயங்கியிருக்கிறார்கள்.என்னுடைய கதைகள் கட்டுரைகளும் கூட அதில் தவிர்க்கப் பட்டிருக்கின்றன.

**அப்படிப் பார்க்கும் போது நீங்கள் கொடுத்த கட்டுரைகள் கதைகளை கூடத்தங்களுக்கு ஏற்றமாதிரி மாற்றியமைத்திருக்கிறார்களா?**

மாற்றுவது என்பதை விட குறிப்பிட்ட பகுதிகளை நீக்கலாம். அப்படி நீக்குவது என்றாலோ ஒரு சொல்லேனும் வேறொருவர் விருப்பப்படி மாற்றுவது என்றா லோ அது என் படைப்பாக இருக்காது என்பது என் அபிப்பிராயம். அப்படி ஒரு சந்தர்ப்பம் நேருமானால் நான் எழுதியதை பிரசுரிக்க விடாமல்திருப்பி வாங்கிக் கொள்வேன்.

**நீங்கள் இலங்கை வானொலியில் வேலை செய்த காலங்களில்.சரி உங்கள் ஓய்வு நேரங்களிலான பங்களிப்பு மாதிரிச் செய்திருக்கிறீர்கள். அப்படி நீங்கள் செயற்படும் போது அதனால் நீங்கள் எதிர்நோக்கிய சவால்கள் நெருக்கடிகள், அதே நேரத்தில் சமாந்தரமாக நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள்?**

இல்லை இதை நீங்கள் தெளிவாக விளங்க வேண்டும். நான் அதில் வேலை செய்யவில்லை. என் வேலையோ வேலைத்தளமோ அதுவல்ல. என் தொழில்கணக்குத்துறை சம்பந்தப்பட்டது. ஓய்வு நேரங்களை இவைகளுக்காக ஒதுக்கிக்கொண்டு செய்தேன். நன்மைகள் உண்டு. அதாவது இலங்கை வானொலியாக இருக்கட்டும் பத்திரிகை-களாக இருக்கட்டும் எல்லாமே தலைநகரத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்தவை. இலங்கை வானொலி வந்து அரசாங்கத்தினுடையது அதனால் நாம் அதில் எங்கள் எல்லாவிதமான கருத்துக்களையும் முழுமனையாக எழுத முடியாது. பொதுவாக சொல்வதானால் சேவை இரண்டு வர்த்தக ஒலிபரப்பு.

அது ஜனரஞ்சக நிகழ்ச்சிகளைத்தான் வளர்த்துக் கொண்டிருந்தது. சேவை இரண்டில் எழுதுவது தான் இலகுவாகவும் இருந்தது அந்த நேரங்களில். சேவை ஒன்று தான்இலக்கியத்தை வளர்க்கக் கூடிய பரப்பில் இருந்தது. அது நிறையத் தணிக்கைகளை மேற்கொண்டும் இருந்தது. ஆனால் அது அங்கே மட்டுமில்லை நாங்கள் இவ்வளவு சுதந்திரமாக இருக்கிற புலம்பெயர் தேச ஊடகங்கள் சிலவற்றிலும் அது உண்டு. அப்போ எல்லோருமே தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு தங்களைமேம்படுத்திக் கொள்ள நினைக்கும் போது, அவைகளைத்தவிர்த்து தனிப்பட்ட முறையில் எழுதுவது நல்லது என்பது எனது கருத்து.

**முதல் நாவல் சமூகத்தால் ஏற்கப்படாது என்று தெரிந்து கொண்டு காதல்காமம் இவைகள் வயதின் அடிப்படையில் ஏற்படுவது இல்லைஎன்பதை எல்லாவற்றுக்கும் அடிப்படை மன ஆதரவு நெருக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை எழுதினேன்**

அப்படியான் சில காரணங்கள்தான் நான் எல்லாவற்றையும் விட்டு ஒதுங்கவும் ஓரளவு காரணமாக இருந்தன.

**நீங்கள் ஒருஎழுத்தாளர் ஒரு கவிஞர்.ஊடகங்களிலும் பணியாற்றியவர் உங்களுக்கு என்று ஒரு இலக்கியம் சமூகம் பற்றிய கருத்து இருக்குமல்லவா அதைக் கொஞ்சம் கூற முடியுமா?**

இலக்கியம் அந்தக்காலத்தை அதன் சமூகத்தின் மூலம் பதிவு செய்வது என்று நம்புபவள். நடக்காததை நடந்த மாதிரியோ அல்லது அதை நாம் கண்ட மாதிரியோ பதிவு செய்யப்படும் புனைவுகளை நான் எழுத விரும்புவதில்லை மட்டுமில்லை அப்படி எதையும் வாசிக்கக் கூட விரும்புவதில்லை.

**நீங்கள் எழுதிய நாவல்கள் பற்றி அதாவது அது எந்த மாதிரியான சந்தர்ப்பங்களில்எழுதப்பட எப்படியான நாவலகள் என்று சொல்ல முடியுமா?**

பொதுவாக என் கதைகளில் வரும் சம்பவங்களோ கதாபாத்திரங்களோ அடிப்படை உண்மையாகத்தான் இருக்கும். சந்தர்ப்பங்களை மட்டும் தான் மாற்றியிருப்பேன் ஆனால் கதாபாத்திரம் வெளிப்பட்டுத் தன்னை அடையாளப்படுத்தி காட்டிவிடும் என்று தோன்றுபவைகளை உரியவர்களிடம் அனுமதி எடுத்த பின்பே எழுதுகிறேன்.

**நீங்கள் உங்கள் எழுத்துக்களை ஒரு உண்மையின் அடிப்படையில் ஆதாரமாக கொண்டு எழுதுகிறீர்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதனால் நிறையப் பிரச்சனைகள் விமர்சனங்களை எதிர்நோக்கி இருப்பீர்கள்?**

அது தாராளமாக வந்தது. முதல் நாவல் சமூகத்தால் ஏற்கப்படாது என்று தெரிந்து கொண்டு காதல்காமம் இவைகள் வயதின் அடிப்படையில் ஏற்படுவது இல்லைஎன்பதை எல்லாவற்றுக்கும் அடிப்படை மன ஆதரவு நெருக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை எழுதினேன். விமர்சனங்கள் இருந்தாலும் ஏற்றார்கள் மற்ற நாவல் முற்று முழுதா வெளிநாட்டில் வாழும் எங்கள் இளைஞர்களின்காழ்ப்புக்கள் போட்டிகள், அதனால் அவர்களை நம்பிவரும் மனைவி மீதான பிரயோகங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதியது.

**நீங்கள் ஒரு எழுத்தாளராக இலக்கியவாதியாக உங்கள் நாட்டில் இருந்து வந்து புலம்பெயர் தேசத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் இருக்கும் நாட்டில் எம்மவர் எழுத்துத் துறை எப்படி இருக்கிறது.?**

நான் ஒன்று முதலில் சொல்லவேண்டும் நான் புலம்பெயர்ந்து வந்தபின் என்னால் அதை தொடரமுடியவில்லை என்னால் முடியவில்லை ஓரளவு நீண்ட வருட இடைவெளியின் பின் நான் திரும்பவும் இந்தத் தளத்துக்குள் கால்வைக்கும்போதுநான் இருக்கும் நாட்டில் பெரிதாக அதற்கான வாய்ப்புக்கள் இருக்கவில்லை

**நீங்கள் தாய்நாட்டில் இருந்து எழுதியமைக்கும் இங்கு இப்போது புலம்பெயர்ந்து எழுதுவதற்கும் இடையில் உங்கள் எழுத்துக்களில் என்ன வித்தியாசத்தைக் காண்கிறீர்கள் ?**

அப்படிபார்த்தால் அப்போதுசிறுவயது அனுபவம் குறைவாக இருந்தது .வாழ்க்கை பிரச்சனைகள் போன்றவற்றை இப்போது அனுபவ ரீதியில் ஆழமாக நோக்க , சிந்திக்க அதை எழுத முடிகிறது. ஆனால் அங்கு கூடுதலான பிரச்சனைகளை அறிய, அவைபற்றி எழுதத் தூண்டக்கூடிய வாய்ப்புக்களும் மனிதர்களும் அங்கே எனக்கு இருந்தார்கள்.

**ஒரு எழுத்தாளர் ஒரு இடத்தை விட்டு இன்னொரு இடத்துக்கு நகரும்போதுநகர்த்தலுக்கு தூண்டிய காரணி அவரது எழுத்தில் தாக்கத்தைக்கொடுக்கும் அவர் இருந்த , இருக்கும் இடத்தில் இருக்கும் அகப் புறக்காரணிகள் பாதிப்பை கொடுக்கும். அப்படியான எ தாக்கங்கள் உங்களுக்கு ஏற்பட்டதா? அவைகளை உங்கள் எழுத்துக்களில் வெளிப்படுத்தி இருக்கிறீர்களா?**

நிறைய. என் வீழ்ச்சி அதில் தான் இருந்தது. மிக நீண்ட காலத்துக்குப் பிறகு இந்தத் துறைக்குள் நான் மீண்டும் வரும் போது இதைவிட்டு விலகிஇருந்த பாதிப்பின் அழுத்தம் இருந்தது. சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு அதனோடு இசைவாக்கி, நான் கவனிப்பிற்கு உள்ளான பின்பே அவைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று நினைத்தேன். நான் கவனிக்கப்படாத சூழலில் என் கருத்துக்களும் கவனிக்கப்படாமல் அடிபட்டுப் போகும் என்று நினைத்தேன். அந்தக்கவனிப்புக்குப் பின்னால் என் எழுத்துக்களில் பொதுவாக என் முகநூல் பதிவுகளில் பார்த்தீர்கள் என்றால் கூட கவிதைகள் அல்லது பொது இடங்கள் பற்றிய கட்டுரைகள் தவிர என் மற்றைய ஆக்கங்களில் நான் அவைகளை தான் வெளிப்படுத்தி இருப்பேன். கூடுதலாக என்னைப்பாதித்த பெண்கள் பற்றிய பிரச்சனைகள் தான் அதிகம் இருக்கும். தவிர இங்கு புலம்பெயர் ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்குக் கொடுக்காமல் இலங்கை ஊடகங்களில் வெளியான என் எழுத்துக்களில் இந்தப் பாதிப்புக்கான காரணிகளை வெளிப்படுத்தி இருக்கிறேன்.

**இன்னொன்றை அறிந்து கொள்வதிலோ அதில் கலந்து கொள்வதிலோ எந்தவித தவறும் இல்லை. அவைகளில் நிறைய நல்ல விசயங்களும் உண்டு.**

**அதிகமாக எங்கள் புலம்பெயர் மக்கள் புலம்பெயர்ந்து வந்து பல்வேறு நாடுகளில் இருந்தாலும் அந்தந்த நாடுகளில் உள்ள சமூக மக்களுடன், கலை கலாச்சாரம் மொழி பண்பாடுகளுடன் ஒட்டாமல் தாங்கள் தங்களுக்குள் ஒரு வட்டத்தைப்போட்டு வாழ்ந்து கொண்டிருப்பதாக ஒரு குற்றசசாட்டு உண்டு அது பற்றி ஒரு எழுத்தாளராக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

அது முற்று முழுதாகத் தவறு என்று தான் சொல்வேன். எங்களுக்கான அடையாளங்களில் எமக்கு தெளிவான கண்ணோட்டமும் அதில் பிடிப்பும் இருந்தால்நாம் எம்மை இன்னொன்றில் தொலைத்து விடாமல் அவர்களுடன் சேர்ந்து பழக முடியும். இன்னொன்றை அறிந்து கொள்வதிலோ அதில் கலந்து கொள்வதிலோ எந்தவித தவறும் இல்லை. அவைகளில் நிறைய நல்ல விசயங்களும் உண்டு. நாங்கள் எங்கே இருக்கிறோமோ அந்த இடத்தோடு எம்மை இணைத்துக் கொண்டால் தான் அவர்களைத் தாண்டியும் எம்மால் நிமிர முடியும்

**அப்படி அவர்கள் இருக்கிற நாடுகளுடைய பண்பாடுகள் கலாச்சாரங்களுடன்கலக்காமல் தங்களுக்குள் தாங்கள் ஒரு குழுமமாக இருப்பதற்கான காரணம் என்ன?**

படிக்க அனுமதியளித்து மாணவர்களாக அழைத்துக் கொண்ட சில நாடுகள் தவிர மற்றைய எல்லா நாடுகளிலும் ஆண்கள் தான் முதலில் வந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் மொழி அல்லது நிறம்காரணமான தாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மை அல்லது எதோஒன்று அது அவர்களுக்குத் தான் தெரியும் அதன் காரணமாக பலர் அந்நிய சமுதாயத்துடன் ஒட்டுதல் இல்லாத ஒரு நிலையை ஆரம்பத்திலேயே ஏற்படுத்திக்கொண்டு விட்டார்கள். பின் தம்மை நிலை நிறுத்திக் கொண்டு ஊரில் இருந்து திருமணத்துக்காகப் பெண்ணை வருவிக்கும் போது இவர்கள்காட்டிய வழியில் போக வேண்டிய கட்டாயம் வந்த பெண்களுக்கு இருந்தது. மொழி, அந்நிய மக்கள் அறிமுகம் என்பன அவர்களுக்கு பெரிதாக தங்கள் கணவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது குறைவாகவே இருந்தது. தம்நட்பு வட்டங்கள் மட்டும் அறிமுகப்படுத்தப்பட, அதற்குள் குழுக்களாகப் பிரிந்து குழந்தைகளுக்கும் அதையே அறிமுகப்படுத்தி நெருக்கடிஉளுக்குள் அவர்களையும் நெருக்கிக் கொண்டு அதுவே பிரச்சனையாகி இப்போதெல்லாம் அவர்கள் குழந்தைகளை இழக்கவும் இந்த வாழ்வு முறையே காரணமாகவும் இருக்கிறது.

**முக்கியமான கேள்வி.புலம்பெயர்ஈழத்துத்தமிழ் இலக்கியங்கள் பற்றி ஒரு எழுத்தாளராக கவிஞராக உங்கள் பார்வை என்ன?**

சில இலக்கியப் படைப்புக்கள் உண்மையாகவே நிமிர்ந்து பார்க்க வைக்கிறது. பலபடைப்புக்கள் பற்றி எனக்கு அபிப்பிராயம் சொல்லப்பிடிக்கவில்லை. எனக்கு அவை என்ன சொல்ல வருகின்றன ஏன் எழுதப் பட்டன என்பதே புரியாமல் இருப்பதால் வாசிக்கக் கூட விரும்பு வதில்லை.

**இன்னொரு குற்றச்சாட்டு உண்டு அதாவது தாம் இருக்கின்ற நாடுகளில் உள்ள பிரச்சனைகளையும் சேர்த்து எழுதும் போது தான் அதை ஒரு புலம்பெயர் இலக்கியமாக ஏற்றுக் கொள்ள முடியும் என்று , தவிர இங்கிருந்து கொண்டு தாய் நாட்டைப்பற்றி எழுதுவது புலம்பெயர் இலக்கியமாக ஆகுமா என்று அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

என்னைப் பொறுத்தவரை புலம்பெயர் வாழ்வு ஒன்றைப் பதிவு செய்யும் போதுஅதில் கட்டாயம் அங்குள்ள நடைமுறை வாழ்க்கை, பிரச்சனைகள் கலக்கப் வேண்டும். அது புலம்பெயர் இலக்கியம். தாய் நாட்டில் அனுபவித்தவற்றை இங்குவந்திருந்து எழுதுவது என்பதும், எழுதுவதற்காக தாய் நாட்டிற்குச் சென்று அனுபவங்களையும் தகவல்களையும் திரட்டி வந்து எழுதுவது என்பது வேறு. அதனுடன் புலம்பெயர் வாழ்வியல் தாக்கங்களும் கலக்கப்படும் போது அதைப் புலம்பெயர் இலக்கியம் என்று அழைக்க முடியும். மற்றப்படி இந்த இரண்டு அனுபவங்களும் இல்லாமல் தாய் நாட்டைக் கற்பனையில் கண்டு இங்கிருந்து எழுதுவதை புலம்பெயர்ந்தவர் இலக்கியம் என்று வேண்டுமானால் சொல்லலாம்

**நாங்கள் விடுதலைக்காகப்போராடிக்கொண்டிருக்கும் ஒரு இனம். அப்படி இருக்கும்போது எங்களுக்குள்இருந்து வெளிவரும் இலக்கியங்கள் அதன் காத்திரமான பங்களிப்புக்கள் எப்படி இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?**

அது என்ன நோக்கத்துக்காகத் தொடங்கப் பட்டதோ அதை நோக்கிய பாதையில் செல்லவேண்டும் எங்கள் எழுத்துக்களும். எங்கள் எழுத்துக்கள் அதைக் கொச்சைப் படுத்துவது நோக்கத்தை சிதறடித்து விடும் . அந்த நோக்கத்தை நோக்கிய எழுத்துக்களை எண்கள் விமர்சனங்களால் கட்டுப்படுத்தாமல் இருக்க வேண்டும்

**2009மே மாதத்தின் பின்பு தான் பொதுவெளியில் கருத்துச் சுதந்திரத்துடன் பேச எழுதக்கூடியதான சூழ்நிலை அமைந்திருப்பதாக ஒரு சாரார் சொல்கிறார்கள் அதன் முன் அப்படியான சூழ்நிலை இருக்கவில்லை என்று நினைக்கிறீர்களா?**

எனக்கு இந்தக் கூற்றுக்கான முழுமையான அர்த்தம் அதாவது அதைச் சொல்பவர்களின் கணிப்பில்அதன்அர்த்தம் விளங்கவில்லை. எதை எதனுடன் தொடுப்பது என்று இல்லாமல் எடுத்த பாட்டில் எதோ ஒரு முடிவில் எதோ பெறுமதியாக நாமும் பேசினோம் என்பது போலப் பேசுவது போலவே இருக்கிறது எனக்கு அது. ஏன் அதற்கு முன் ஊடகங்கள் இல்லையா அல்லது அல்லது எழுதுவது பேசுவது எல்லாம் எங்கிருந்தோ எவராலோ தணிக்கை செய்யப்பட்டுக் கொண்டு இருந்ததா? எழுதிக் கொண்டும் பேசிக்கொண்டும் தானே இருந்தார்கள். ஒரு அப்போது பேசிய வார்த்தைகளை இப்போது புரட்டிப்போட்டுச் சொல்பவர்களால் இப்படியான கருத்து முன்வைக்கப் பட்டிருக்குமாயின் இப்படி இருநாக்கு மனிதர்கள் சம்பந்தப்பட்ட இந்தக் கேள்வி கூட அவர்கள் போலவே அவதானிக்கப் படவேண்டியது இல்லை

**புலம்பெயர் வாழ்வு ஒன்றைப் பதிவு செய்யும் போதுஅதில் கட்டாயம் அங்குள்ள நடைமுறை வாழ்க்கை, பிரச்சனைகள் கலக்கப் வேண்டும். அது புலம்பெயர் இலக்கியம்**

**2009 இற்குப் பிறகு போர் இலக்கியம் என்றும் தமிழினப் படுகொலைகளைப் பதிவு செய்கிறோம் என்று சொல்லியும் நிறைய இலக்கியங்கள் புனைவு இலக்கியங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அவைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அவைகள் எல்லாவற்றையும் நான் வாசித்தேன் என்று சொல்ல முடியாது.ஒரளவு எனக்கு நம்பிக்கையானவர்கள் சொல்லும் விமர்சனங்களை வைத்துத தான் நான் சில புத்தகங்களை வாசிக்கத் தேர்ந்தெடுத்தது உண்டு. அப்படித் தவிர்த்த புத்தகங்கள் அல்லது வாசித்து விட்டு அவைகள் பற்றிப் பேசுவதையும் கூடத் தவிரத்த புத்தகங்கள் தான் அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்றில் பிரபலமானவர்களுக்கு நாமும் அவசரமாக விருது வழங்கி விட்டால் அந்த வெளிச்சத்தில் நாமும் சற்று மின்னிவிடலாம் என நினைப்பது கூட விலை தான்**

என்று சொல்லலாம்.

**அப்படியான இலக்கியங்கள் காத்திரமான பங்களிப்பைக் கொடுத்திருக்கின்றனஎன்று நினைக்கிறீர்களா?**

சிலவற்றை வாசிக்கும் போது ஏன் என்ன நோக்கத்திற்காக எழுதினார்கள் என்ற கேள்விகள் மனதில் எழுந்ததுண்டு. காழ்ப்புகள் கற்பனைகள் திரிபுகள் நிறைய அவதானிக்க முடிந்தது

**புலம்பெயர் ஈழத்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க எழுத்தாளர் என்று யாரை உங்களால் குறிப்பிட முடியும்?**

சில கேள்விகளுக்குப் பதில்களே சொல்லாமல் இருத்தல் நல்லது என்று நினைக்கிறேன்.

**தரமான படைப்புக்களை வழங்கி புலம்பெயர் இலக்கியங்களுக்கு வலுச் சேர்த்தவர்கள் என்று யாரை நினைக்கிறீர்கள்?**

நான் இந்தத் துறையில் இருப்பதால் சில நேரடி விமர்சனங்களை விரும்பவில்லை ஆனால் என் பதிவுகளில் அவர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் குறிப்பிடும் கருத்துக்களில் பதிவுகளில் அதற்கான பதில்கள் உண்டு

**எங்கள் சூழலில். கவிதை,கதை ,கட்டுரை இப்படி ஏதாவது ஒரு அல்லது இரண்டு நூல்களை சொந்தச் செலவில் வெளியிட்டு விட்டு தங்களைப் பெரிய எழுத்தாளர் கவிஞர்கள் என்று அடையாளப்படுத்திக்கொண்டு திரிபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்,?**

பொதுவாக எழுத்தாளராக கவிஞராக உருவாக முயன்று எழுதலாம்.ஆனால் அவரது எழுத்துத் தான் அவர் எதிர்பார்த்த அடையாளத்தை அவரது பெயரில் பதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவள் நான்.தம் பெயருக்குப் பக்கத்தில் தாமே அடையாளப் பட்டத்தைச் சூட்டிக் கொண்டுள்ளவர்கள் படைப்புக்களைதிரும்பிப் பார்ப்பது கூட நேரமினக்கேடு என்று நினைப்பவளிடம் இப்படி ஒரு கேள்வி.... தனக்குள் நிறைவாக உள்ள குடங்கள் இருக்கிறது இருக்கிறது என்று குலுங்கிககாட்டவேண்டிய அவசியமில்லாதவை. தகுதி உள்ளவை தகுதி உள்ளோரால் அடையாளம் காணப்படும். மற்றவை கால நதியில் கரைந்து விடும்

**தாய் நாட்டில் இலக்கியப் போக்கு வளர்ச்சி எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்று நினைக்கிறீர்கள்?**

போர் மட்டுமே இலக்கியமல்ல. போரிலக்கியம் என்பது ஒரு பகுதி அதை விட சமூக வாழ்வியலை இளைஞர்கள் மிகச் சிறப்பாக எழுதுகிறார்கள். அதிகம் எழுதிய என்பதினெட்டு பத்தொன்பது வயதுக் காலப்பகுதிகளில் நான் பெரிதாக நிமிர்ந்து பார்த்த அல்லது பார்க்கவைக்கப்பட்ட வயது மூத்த மனிதர்களை விட இப்பொது உள்ள இளைஞர்கள் விரிந்துபட்ட பார்வைகளுடன் எழுதவதாகத் தோன்றுகிறது.

**எங்கள் இலக்கியங்கள் சார்பிலக்கியமாகத்தானே போய்க்கொண்டிருக்கிறது நடுநிலையாக எவரும் எழுதக் கூடிய மாதிரி....?**

நடுநிலையாக எழுதியமாதிரி எனக்கும் தெரியவில்லை. ஆனால் இருபக்க சார்பும் போய்க்கொண்டிருக்கிறது. ஒன்று சார்பிலக்கியமாகவும்மற்றையது எதிர்ப்பு இலக்கியமாகவும். ஒரு நல்ல வாசகர் இரண்டையும் வாசிப்பதன் மூலம் நடுநிலை யான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்,. ஏனெனில் புனைவுகள்தம் போலித்தன்மையை அடையாளம் கட்டி விடும்.

**இலக்கியங்களுக்கு விருது வழங்குவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

விருது பெற்றவை தான் சிறப்பான இலக்கியங்கள் என்பதை என்னால் எப்போதும்ஏற்றுக் கொள்ள முடியாது. இலக்கியங்கள் மட்டுமல்ல ஓரளவு விளையாட்டுத் துறை தவிர வேறு எந்த விடயங்களிலும் விருது என்பதை பெரிதான ஒரு அங்கீகாரமாக நான் எண்ணுவதில்லை. ஏனென்றால் விருது விலைபோகாத வரை தான் விருதுக்கு விருது என்று பெயர். விருதுகள் விலைபோகவும் கூடியவை என்பது என் எண்ணம்.

**ஈழத்தின் புலம்பெயர்இலக்கியங்கள் சிலவற்றுக்கு தமிழ்நாட்டில் கூட அண்மைக் காலத்தில் விருதுகள் வழங்கி இருக்கிறார்கள் அவைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அதற்கான பதிலைத்தான் நான் முதலே சொல்லியிருந்தேன். நீங்கள் கேட்பது பற்றி எனக்குத் தெரியாது ஆனால் விருதுகள் விலை போகாதவரை தான் விருதுக்கு விருது என்று பெயர். ஏதாவது ஒன்றில் பிரபலமானவர்களுக்கு நாமும் அவசரமாக விருது வழங்கி விட்டால் அந்த வெளிச்சத்தில் நாமும் சற்று மின்னிவிடலாம் என நினைப்பது கூட விலை தான்

**நீங்களும் சில விருதுகள் பெற்றிருக்கிறீர்கள் தானே?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பதிலாலேயே மடக்குகிறீர்களா? நீண்ட காலத்துக்கு முதல் போர் இலக்கியங்கள்பெரிய அளவில் வெளிவராத காலங்கள். அவைகளின் அடையாளங்களை காட்டினால் புரியும். எனக்கு அவர்களையோ அவர்களுக்கு என்னையோ அடையாளம் தெரியாது. என் எழுத்துக்கள் தவிர எந்தத் தொடர்பும் கிடையாத நேரத்தில் கிடைத்த விருதுகள். விருது மேடையில் கூட அவர்கள் என்னைக் கண்டதில்லை இன்று வரை என்னை தெரியாமல் இருக்கவும் சந்தர்ப்பங்கள் உண்டு. இலங்கை தவிர வேறு நாடுகளிலும் அந்தப்பரிசளிப்பு நிகழ்வுகள் நடந்தும் நான் எங்கும் இன்று வரை கலந்துகொண்டதில்லை.பின் இத் துறை விட்டு முழுவதுமாக ஒதுங்கிப் போய் இருந்தேன். கடந்த 2012 வரை.

**வடிவமோ பிரியோனமில்லாதவை தோல்வியின் வடிவம் என்று அரச ஒடுக்குமுறையாளனுக்கு சார்பான ஒரு போக்கு இருக்கிறது இது பற்றி உங்கள் கருத்தென்ன?**

இவைகளை அதிகம் எழுதுபவர்களைப் பார்த்தால் கூடுதலாக அவர்கள் அதற்குள் இருந்து வந்தவர்களாகவே தான் அதிகம் இருக்கிறார்கள். ஒரு இடத்தில் இருந்து வெளியேறியோ வெளியேற்றப்பட்டோ புனையப்படும் ஒன்று என் அடிமானப் பாதிப்பு அல்லது பாதுகாப்பு சார்ந்ததாக இருக்கும் சாத்தியக்கூறுகளையேஅதிகம் கொண்டிருக்கும் வாய்ப்பு இருப்பதால் அது நடுவுநிலைமையான கருத்து என்று கொள்ளுதல் எனது அறிவுக்கு எட்டியவரை

**பெண் எழுதினர் என்றாலும் நீங்கள் மிக தரக்குறைவான கொச்சையான வார்த்தைகளால் அவரை விமர்சிக்கிறீர்கள். உங்கள் முதல் கல்லெறி அவரது ஒழுக்கம்மீதான சந்தேகத்தில் அல்லது களங்கப்படுத்தலை நோக்கித் தான் விழுகிறது அதனால் கூட பல நல்ல எழுத்தாளர்கள் இந்தத்துறையை விட்டு ஒதுங்கி இருக்கலாம்**

**புலம்பெயர்சூழலிலும் சரி தாயகத்திலும் சரி இன்றைய சூழலில் ஒரு போட்டி பான்மையும் இவர் எழுதுற கருத்து சரியில்லைஅவர் எழுதுற எழுத்துத் தான் நல்லது அப்படி ஒரு மனப்பான்மை போய்க்கொண்டிருக்கிறது அது பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?**

அது இன்றைய சூழலில் மட்டுமல்ல அன்றைய சூழலிலும் இருந்தது ஆனால் இன்று அது அதிகரித்திருக்கிறது. இன்று அதிகரித்திருக்கிறது என்பதை விட எழுதுவதை எதிர்ப்பதை எல்லாம் வெளிக்கொண்டு வரும் வசதி இன்று அதிகரித்து இருக்கிறது. அது தவிர என்னுடையது தான் சிறப்பானது என்ற ஒரு எண்ணம் எனக்குள் புகுந்து கொள்கிறதோ அடுத்ததில் உள்ள சிறப்பு என்னால் உணர முடியாததாக ஏற்க முடியாததாகப்போய் விடும். அந்த ஒரு சின்னத்தனம் இந்த வார்த்தைகள் அல்லது என்னப்பாடுகளுக்கான அடிப்படைக் காரணமாக இருக்கக் கூடும்.

**குழுவாகபபிளவுபட்டு இரண்டுபிரிவாகி இருக்கிறதே. இவைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள். இது இலக்கியத்துறைக்கு ஆரோக்கியமானதா?**

அப்படி முன்பும் இருந்ததே சமூகவியல்நோக்கில் குழுக்களாக பிரிந்திருந்தார்கள்

**முள்ளிவாய்க்காலில் எங்களுடைய ஆயுத-ரீதியான போராட்டம் பாதிக்கப்பட்டபின் இன்றைய எழுத்துக்களில் விடுதலைப்போராட்டத்துக்கு ஆதரவாக ஒரு பிரிவினரும், இன்னொரு பகுதியினர் ஆயுதப் போராட்டமோ , அல்லது வேறு போராட்ட**

சரியாகப்படவில்லை. அதற்கும் மேலே எங்கே என்ன பிளவு என்றாலும் எந்தக் காலத்திலும் அதற்கு ஒரு ஜால்ரா கோஸ்டி உடனே கூடி விடும். பிறகு இருபக்கமும் தட்டித் தட்டியே வளர்த்தும் விடுவார்கள். இவை இவைகளையும் நான்எப்போதும் மதிக்காததால்அதுபற்றி அதிகம் சிந்திக்கவும் விரும்புவதில்லை

**இப்படியான பிளவுகள் எங்கள்இலக்கியத்துக்கு ஆரோக்கியமானது என்று நினைக்கிறீங்களா?**

இல்லை. ஆனால் வாசகருக்கு அது ஆரோக்கியமான விடயம் ஏனென்றால் ஆதரவான பக்கத்தையோ எதிரான பக்கத்தையோ ஒன்றை மட்டும் எழுதிக் கொண்டிருந்தால்வாசகர்களாகிய நாங்கள் அதை மட்டும் வாசித்து நம்பிக்கொண்டு அந்தவழியில் போய்க்கொண்டிருப்போம். இங்கு இரு பக்கமும் மோதிக்கொள்ளும் போது கொட்டுவதை வைத்து நாங்கள் நடுவில் என்ன நடந்தது என்பதைப் பெற்றுக் கொள்வது சிந்திக்கத் தெரிந்த வாசகனின் கடமை. அல்லது திறமை. நீங்கள் எதைவேண்டுமானாலும் எழுதிமோதிகொள்ளுங்கள் ஆனால் நாங்கள்அது எது நம்பகத்தன்மை கொண்டதோ நமக்கு வேண்டியதோ அதை மட்டுமே எடுத்துக் கொள்வோம்.

**இப்படி எங்கள்விடுதலைப்போராட்டத்துக்கு எதிராக வாற எழுத்துக்களை இன்னொரு பிறமொழிக்காரர் பார்த்து அறியும் போது அது எங்கள் விடுதலைப் போராட்டத்துக்கான ஒரு பலவீனமாகத்தானே அமையும்?**

நிச்சயமாக. அதாவது வந்து அதை எழுதுபவர்களுடைய அறிவீனம் அல்லது குறுகிய நோக்குத் தான் அது. நாங்கள் வந்து எங்கள் வரலாற்றை உலகவரலாற்றில் எங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளாலேயே கேவலமாக எழுதிக் கொண்டிருக்கும் கீழ்த்தரமான செயலைச் செய்துகொண்டிருக்கிறோம்ஆனால் அதை எழுதும் போது எதுவும் நடக்கவே இல்லை என்று சொல்வதை விட ஆபாசங்களாக வர்ணிக்கப்படும் இந்த அவலங்களும் நடந்தன என உலக அரங்குக்கு எடுத்துக்காட்டும் எழுத்தை

அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நான் மதிக்கிறேன். அவைகளை மறைத்து வைப்பதன் மூலமாக எதிரிக்கு வரலாற்று ரீதியாக வாழ்த்துப் பாடுகிறோம் என்று தான் சொல்லலாம் .

**எங்கள் ஈழத்து இலக்கியச்சூழலில் பெண்களின் பங்களிப்பு எப்படி இருக்கிறது?**

குறைந்த அளவில் தான்இருக்கிறது என்று நினைக்கிறேன். வெளிப்படையாகஆழமாக எழுதும் பெண்கள் குறைவாகவே இருக்கிறார்கள். திறமை இருந்தும் அவர்கள் தம்மை வெளியில் நிலைநிறுத்திக் கொள்ள குடும்பம் சமூகம்சார்ந்தபிரச்சனைகள் இருப்பதற்கான கூறுகள் அதிகமாகவே இருக்கின்றன. அதோடு நீங்கள் இன்னொன்றும் உணர்ந்து கொள்ள வேண்டும் புனைவு இலக்கியத்தை கூட ஒரு ஆண் எவ்வளவு கொச்சையாக எழுதினாலும் நீங்கள் இலக்கியத்தைத் தான் விமர்சிக்கிறீர்கள். எழுதியவரை அல்ல. ஆனால் உண்மையை ஒரு பெண் எழுதினர் என்றாலும் நீங்கள் மிக தரக்குறைவான கொச்சையான வார்த்தைகளால் அவரை விமர்சிக்கிறீர்கள். உங்கள் முதல் கல்லெறி அவரது ஒழுக்கம்மீதான சந்தேகத்தில் அல்லது களங்கப்படுத்தலை நோக்கித் தான் விழுகிறது அதனால் கூட பல நல்ல எழுத்தாளர்கள் இந்தத்துறையை விட்டு ஒதுங்கி இருக்கலாம். பெண்களின் எழுத்துப்பற்றிய உங்கள் எதிர்பார்ப்பில் அதிகமாக இருப்பது காதலை, கல்யாணத்தை, தாலாட்டை மிஞ்சினால் நிலவைப்பற்றியும் எழுதிக் கொண்டும் பாடிக்கொண்டும் இருங்கோ அதுக்கு மேலே எழுதினால் வார்த்தைகளால் அசிங்கப்படுத்தி விடுவோம் என்பது போல் அல்லவா இருக்கிறது. சநூகத்தின் அதிக தொகையினரின் கணிப்பீடு. முக்கியமாக ஆண்களின் கணிப்பீடு. ஒட்டுமொத்தமாக குற்றம் சாட்டவில்லை ஏனெனில் என்னை அந்த வட்டத்துக்குள் சுருண்டு விடாமல் வெளியே இழுப்பது என் குடும்பம் , என் சகோதரர்கள், நண்பர்கள்.

**சில மூத்த எழுத்தாளர்கள் வந்து சில கொள்கைகள் கோட்பாடுகளின் அடிப்படையில் புறக்கணிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அடையாளம் இல்லாத அளவுக்கு அதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை வீச்சாக எழுதிய அந்தக் காலங்கள் கடந்து விட்டதாகவும் இருக்கலாம்.**

**எங்கள் தமிழ் சமூகத்தில் வாசிப்பு நிலைமை எப்படி இருக்கிறது?**

மிகப்பலவீனமாக இருக்கிறது என்று சொல்வேன். அதாவது இப்போது உள்ள இளம்சமுதாயம் ஓரளவு வாசிப்பு ஆர்வம் கொண்டிருக்கிறது . மற்றப்படி நடுத்தர மூத்த வயதினரின் ஆர்வம் எல்லாம் இந்தியத் தொலைக்காட்சித் தொடர்கள், ஆடல் பாடல் போட்டி நிகழ்ச்சிகள் அவை பற்றிய பேச்சுக்கள் சர்ச்சைகளையே வாழ்வின் தலையாய பிரச்சினைகளாகக் கொண்டிருக்கிறார்கள் .

வாசிப்பதை விட ஒரு மயக்கத்துக்குள் அல்லது மாயைக்கு அடிமையாகி முடங்குவது தான் எல்லோருக்குமே இலகுவாக இருக்கிறது.

**எங்கள் மத்தியில் எழுத்தாளர்கள் அதிகரிப்பது போல வாசிப்போர் வீதம் அதிகரிப்பதாகத் தோன்றவில்லை. வீழ்ச்சி அடைவது போலல்லா இருக்கிறது எதனால் என்று நினைக்கிறீர்கள்?**

எந்த ஒரு விடயமும் இடையில் நிறுத்தப்பட்டு பின் முன்பு இருந்தது போல இயல்பாக நடைமுறைப்படுவது இலகுவானதல்ல. இலங்கையிலானால் போர் அவலங்களால் வாசிப்பதற்கான வாய்ப்புக்கள் அல்லது அமைதியான மனநிலை குறைந்திருக்கக் காரணங்கள் உண்டு. அதே போல் புலம்பெயர் தேசங்களில் உள்ள

இயந்திர வாழ்க்கையும் நூல்கள் கிடைக்காமையும் ஆரம்ப காலங்களில் இவற்றுக்கானகாரணிகளாக இருந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். இப்போது போர் முடிந்த அமைதி என்று சொல்லப்பட்டுக்கொண்டிருக்கும்காலப் பகுதியில் அங்கு நூல்கள் ஓரளவு தாராளமாகக்கிடைக்கும் நிலையில் மக்கள் வாசிப்பு மனநிலையைத் தொலைத்து விட்டு தென்னிந்தியத் தொலைக்காட்சிக்குள் புதைந்து கொண்டு வாசிக்கும் சிந்திக்கும் திறனை இழந்து கொண்டிருக்கிறார்கள். அதே போல் தான் வெளிநாடுகளிலும் இப்போது நூல்கள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் ஓரளவு இருந்த போதும் இங்கும் அதே தொலைக்காட்சி ஆட்சி தான். அதுவும் தவிர எல்லோரும் எழுத்தாளர்கள் ஆக விரும்புகிறார்கள் தம் எழுத்தை மற்றவர் வாசிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் தவிர தான் வாசகராக இருக்க இப்போது எழுதும் பலர் விரும்புவதில்லை.. இன்னொன்று எழுத்தாளர்கள் பெருகுகின்றார்கள் என்பதற்காக எழுதுபவை எல்லாம் வாசிக்கக்கூடியதாக இருக்கின்றதா என்ற கேள்வியும் வாசகர் சார்பில் முக்கியமானதே.

**வாசிப்புத் தன்மை குறைவாக இருக்கும் அதே நேரத்தில் புதிதாய் ஒரு தலைமுறை எழுத்து ஆர்வத்துடன்வந்துகொண்டிருக்கிறது. இது ஒரு நல்ல போக்கு அதே நேரத்தில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இப்படியானவர்களுக்கு வழிகாட்டக்கூடிய ஆற்றல் மிக்கஎழுத்தாளர்கள்துணிந்து முன்வந்து ஏதாவது செய்வார்களா? அதாவது பிரயோசனமான வழியில் அவர்களது எழுத்துக்கள் உருவாகக் கூடிய மாதிரி.**

நான் என் தனிப்பட்ட அவதானிப்பில் சொல்வதானால் தாயகத்தில் இருந்து ஒரு இளையதலைமுறை நல்ல வீச்சுடன் வந்து கொண்டிருந்தது. அவர்களின் ஆரம்ப எழுத்துக்களேஅவை கொண்டிருந்த கருத்துக்கள் காத்திரம் என்பவற்றால் அவதானிக்க வைத்தன. ஆனால் இப்போது சிலகாலங்களாகஅந்த எழுத்துக்களின் கனதி குறைந்து கருத்துவடிவம் மாற்றம் பெற்றது போல எதோ ஒரு வித்தியாசம் அவதானிக்க முடிகிறது. அதாவது அந்த எழுத்துக்கள் முன்போல இப்போது வாசிக்கத் தூண்டாத நிலையை அடைந்திருப்பதை உணர்கிறேன். காரணம் தெரியவில்லை.

**இப்படி வளர்ந்து வரும் இளைய தலைமுறையை மூத்த தலைமுறை எழுத்தாளர் சிலர் தமக்கு முதுகு சொறிபவர்களாக மாற்றி வைத்திருக்கிறார்கள் தானே?**

மூத்த எழுத்தாளர்கள் என்று சொல்லாமல் மூத்த இலக்கிய வளர்ப்பாளர்கள் என்று குறிப்பிடலாமே நாம்.
அந்த இலக்கிய வளர்ப்பாளிகள் அவர்களை எதோ விதத்தில் சலவைசெய்து வேறு வழியில் திருப்பியிருக்கிறார்கள் போல் உள்ளது என்று நான் சிந்தித்திருக்கிறேன். ஏனென்றால் அந்த இளம் சமுதாயத்தின் எழுத்து நல்ல காத்திரமான கருத்துக்களுடன் வீரியமாக இருந்தது. திசைமாறி இருக்கிறது. ஒரு கலைஞனை விட இலக்கியவாதி வித்தியாசமானவர் . தன மனதுக்குள் தான் உணர்ந்தவைகளை அதன் நீதி ஆறாம் தவறாமல் எழுத வேண்டியவர். அவரை நாங்கள் விரும்பிய படி எல்லாம் வளைப்பதும் அவர் வளைவதும் என்பது இலக்கியம் வளர்த்தல் அல்ல. அந்தத் துறைக்கே செய்யும் துரோகம். இது என் கணிப்பில் நான் உணர்ந்தது. அது சரிதான்என்று சொல்ல மாட்டேன் நான் அப்படி உணர்ந்தேன் என்று சொல்கிறேன். இன்னுமொன்று. சில மூத்த எழுத்தாளர்கள் வந்து சில கொள்கைகள் கோட்பாடுகளின் அடிப்படையில் புறக்கணிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அடையாளம் இல்லாத அளவுக்கு அதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை வீச்சாக எழுதிய அந்தக் காலங்கள் கடந்து விட்டதாகவும்இருக்கலாம். அல்லது அதைவிட வேகமான வீச்சோடு இளைய சமுதாயம் உருவாகி இருக்கலாம்,. எல்லாத் துறைகளிலும் குறிப்பிட்ட காலத்துக்குப்பின்னான தளர்வு என்று ஒன்று உண்டு.அதோடு பார்த்த அவர்களைப்பாதித்த சமுதாயம் வேறு. அதைத்தான் இப்போதும் அவர்களால் அதிகம் எழுத முடியும். அதற்குப் பின்னால் வந்த சமுதாயம் சந்தித்த பிரச்சனைகள் வேறு அதை நிகழ்கால எழுத்துக்களில் பிரதிபலிக்கும் போது இது தான் அதிக கவனிப்பைப் பெரும் வாய்ப்பையும் கொண்டிருக்கும்.

**இலக்கியப்பாதையில் உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன.?**


நான் எதை நோக்கிப் போகப்போகிறேன் என்பதில் தெளிவாக இருக்கிறேன். அதைச் சொல்வதை விட , எங்கு போய் நிற்கிறேன் என்று சொல்வது தான் நல்லது என்று நினைக்கிறேன்.

**உங்கள் பொன்னான நேரத்தை எங்களுக்காக செலவு செய்து இந்தப் பே ட்டியைத்தந்தமைக்கு எங்கள் நன்றிகள்.**

என்னை மதித்து என் கருத்துக்களைப்பதிவு செய்தமைக்கு உங்கள் குழுமத்துக்கு என் நன்றிகள்

---

**இந்திய குடிமகனுக்கு வழங்கப்படும் உயரிய விருதான பாரத ரத்னாவையும் பாகிஸ்தான் குடிமகனுக்கு வழங்கப்படும் உயரிய விருதான நிசான்–இ–பாகிஸ்தானையும் பெற்ற ஒரே இந்தியர்** மொரார்ஜி தேசாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரிடமும் கேளாய்

மனிதர்களை
தொலைத்துவிட்டு
மண்ணின் மேல்
விழுந்து புரண்டு
அழுது கொண்டேன்!

அப்போது
அந்த மண்ணின்
கதறலும் கத்தலும்
கண்களை நீவிக்கொண்டது!!

வெறிச்சுக்கிடந்த
நிலமெல்லாம்
கத்தியது
என் நெஞ்சக்குழாய்க்கு
நீர் ஊற்றும் மரம் எங்கே?
நெருப்பால் சுட்டாலும்
பவித்திரம் செய்யும்
மனிதக் கால்கள் எங்கே?
ஆடு மாடு என்று
அரிவாளின்றி அரியும்
ஐந்தறிவு ஜீவன் எங்கே?

அழுதது அழுதது
அந்த பூமி!

இந்த பூட்ஸ் கால்கள்
புதிதாக இருக்கிறது
இவர்களின் சத்தங்கள்
யுத்தம்போல் இருக்கிறது
பலர் கூடி கூடி
சிரிக்கின்றார்
அதில் பெண்ணை
களங்கப்படுத்திய கதைகள்
அதிகம்!

நான் இடம்பெயர்ந்து
போய் விட்டேனா
இல்லை
யாரோ
இடம்பெயர்த்து வந்தார்களா!

அந்த நிலம்
அழுதது அழுதது
எருக்கலை வேர்மட்டும்
உருக்குலையாமல் நின்றது!

நான்
தொலைத்த மனிதனை
தேடினேன்.
இந்த நிலம்
தொலைத்த
மனிதரையும் மரங்களையும்
தேடுகின்றது!

உயரப்பறந்து போகும்
ஒரு பருந்திடம்
ஒரு நொடி நிறுத்திக்கேட்டேன்.
வானத்திடம் கேட்டுச் சொல்
உனது மார்பிற்கு கிழிருந்த
மண்ணின் குழந்தைகள் எங்கே என்று!

பருந்து சொன்னது
வானமும் தேடிக்கொண்டிருக்கு
இழந்த நிலத்தையும்
இருந்த மனிதர்களையும்!

எனக்கு புரிகின்றது
அந்த நிலம் எதுவென்று
உங்களுக்கு புரிகிறதா?!!.

ஜெயந்தன் நிலவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்

## ஊர் நோக்கிப் போகிறேன்

இந்த வானமும்
நீலக்கடலும் அப்படியே
இருக்கிறது

நட்டுவைத்து நீர் ஊற்றி
நான் வளர்த்த பலாமரம்
குட்டையாகிப் போனது போல்

அடர்ந்த புதர்கள் மட்டும்
அடையாளத்தை மறைத்து
ஆகாயத்தை தொடுவது போல்
அதிசயமாகவே வளர்ந்திருக்கு

ஆலமரமும் இருக்கிறது
அருகமைந்த கோயிலில்லை
காவலுக்கு வைத்த சூலம் மட்டும்
காத்திருக்கு

நெடுத்துக் கோணலாக நெளிந்த
தென்னைமரமும்
நிறுத்தி வைத்த கருந்தூண்களாக
பனைமரமும் எங்களுக்காக காத்திருப்பது
போல்

பழக்கப்பட்ட மண் தான்
பரிச்சியமான மக்கள் எல்லாம்
ஊர் துறந்து அகதியாய்
எங்கெங்கோ போனவர்கள்
எப்படித் தேட

சுபாரஞ்சன்

## அறுந்தாலும் அடையா

குடிசைகள் கோபுரமானதுண்டு
கோபுரங்கள் குடிசையானதுண்டா
இங்கு வரிசைகளாய் இருப்பது
ஓலைக் குடிசைகளே!

அடிமட்ட ஏழைக்கு
அடையாளம் ஓலைக்குடி
அதுவும் தரைமட்டம் தொட
தாழ்ந்திருந்தால் ஏழைக்கு வாழ்வு இழி!

வானம் உயர்ந்திருப்பதால்
வளர்கின்றது மூங்கில்
மானம் உயர்ந்திருப்பதால்
மாண்டியிடாதவன் தமிழன்
வறுமை என்றாலும் -இவர்
வாசல் நிறித்திருக்கும் பூ போல்
நேசம் நிறைந்திருக்கும்
மெல்லிய நெஞ்சில்!

நட்டுக்கிடக்கும் குடிக்கு
நாலுக்கு மேல் காரணமுண்டு
ஒன்று யுத்தம் இரண்டு
வறுமை வடித்த்ம் ரத்தம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# …பக்கம்

## …யாம் காண்போம்

கூடுகள் இருந்தும்-தங்கும்
குருவிகள் இல்லை
பாடுவதற்கு ஒரு பாடலும்
சொந்தமில்லை!
நாடுவதற்கு உறவுக் கால்கள் இல்லை
நகரக் குப்பையிலும் எங்கள்
சாயங்கள் இல்லை!

பருந்துக்கள் வைத்த காலே
விருந்துக்கு மாறிப்போயிற்று வீடுகள்
உயர்ந்த பனையின்கீழ்
உயரப் பார்த்த செங்கல் வீட்டின்
அரும்பு மீசையும் அழிந்து போயிற்று!

அதனாலே தன்னாலே
சரிந்து விழுவதாக இருந்தாலும்
ஒரு பூவைபோல் தென்னோலைபோல்
சரித்திர செடியின் கால்களின் கீழ்
விழுவதே விசித்திரம்....

**ஜெ.ஈழநிலவன்**

## பூக்கும் காலம்

காதலின் முதல் முத்தவாசம்
மூளையில் கிறுக்கேறிக்கிடக்க
வசந்தகாலம் மறுபடி புதுக்க
கவிதைகள் காதலில் தாண்டு
காமத்தில் கழிந்தெழுகின்றது

குளிர் சூட்டைத்தேடியகாலத்தில்
இரவு நீண்டு எல்லா
இரகசியங்களும்
இலையுதிர்த்த
மரங்களாய்க்காத்துக்கிடக்க
வானம் பேசியமொழிகள்
பனித்தூறலாய் மண்ணை முகர
உறைந்துகிடந்த அமைதியை
அழுது குலைக்கும் மழை
மறுபடிவரும்
குழிரெல்லாம்
ஒளிபட்டுத் தனித்துப்போனது

கேட்பார் யாருமில்லா ஒழுங்கு
எம்போதும் எமக்கு
இசைந்ததில்லை
அது அதற்காய் அப்படியே
வாழ்ந்துவிட
இருப்பது தருவது
இல்லாமையின் நினைவே
எப்போதும்
காய்வர பூபற்றிக்கதைப்பதுபோல்

**ப.பார்த்தீ**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுவின்....

# லண்டனில் பிள்ளையார்

மூன்றாம் அத்தியாயம்

கோயில் வாசலில் ஒருவர் பரபரப்பாக துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக்கொண்டிருந்தார். அவர் பிள்ளையாருக்கும் ஒரு பிரசுரம் கொடுத்தார். அதை வாங்கிப் படித்ததும் பிள்ளையாருக்கு தூக்கிவாரிப்போட்டது.

ஏனெனில் அதில் ஆலயப்பொறுப்பாளரான அன்பர் பல லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துவருவதாகவும் ஆலயக்குருக்கள் சாமி கும்பிடவரும் பெண்களிடம் செக்ஸ் சேட்டைகளில் ஈடுபடுவதாகவும் ஆதாரத்துடன் உண்மை விளம்பியிருந்தது. ஆலயக்குருக்கள் மீது கற்பழிப்பு முயற்சி வழக்கு பொலிஸ் பதிவுசெய்துள்ளது. ஆலயப்பொறுப்பாளர் கள்ள கிரடிக்கார்டு மோசடி செய்து பல சிக்கன் கடைகளை நடத்துவதை பொலிஸ் கண்டுபிடித்து முழுக்குடும்பத்தின் மீதும் வழக்கு பதிவு செய்துள்ளது.

கோயில் வருமானத்தில் பெரும்பகுதி தாயகத்தில் அகதிகள் புனர்வாழ்வுக்கு அனுப்புவதாக கூறப்படுவது பொய். அதில் பெரும் பகுதி பணம் ஆலயப்பொறுப்பாளரினால் சுருட்டப்படுகிறது.

இவ்வாறு அப் பிரசுரத்தில் தொடர்ந்து விபரித்திருப்பதை படித்தபோது இது கோயிலா அல்லது கொடியவர்களின் கொள்ளைக் கூடாரமா என பிள்ளையாரை சந்தேகம் கொள்ளவைத்தது.

மனதில் குழப்பத்துடன் உள்ளே சென்ற பிள்ளையாரை வரவேற்ற அன்பர் பிள்ளையார் கையில் இருந்த நோட்டீசைப் பார்த்ததும் முகம் கறுத்து “ இதை ஏன் நீங்கள் படிக்கிறியள்? இந்த நோட்டீசை அடித்த கள்ளன் என்கூட பொறுப்பில் இருந்தவன். உண்டியல் பணத்தை அவன் திருடியபோது கையும் களவுமாக நான் பிடித்துவிட்டேன். உடனே அவனை துரத்திவிட்டேன். அதுதான் ஆத்திரத்தில் இப்படி எனக்கு எதிராக நோட்டீஸ் அடித்திருக்கிறான்” என்று தன்னிலை விளக்கம் கொடுத்தார்.

இவர் அவரை திருடன் என்கிறார். அவர் இவரை திருடன் என்கிறார். மொத்தததில் அனைவரும் திருடர் என்பதே உண்மை போலும் என பிள்ளையார் மனதிற்குள் எண்ணினார்.

லண்டனில் இப்போது லாபம் தரும் பிசினஸ் கோயில் நடத்துவதுதான் என நண்பர் ஒருவர் பிள்ளையாருக்கு கூறியிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கூறியது உண்மைதான் என இப்போது பிள்ளையார் உணர்ந்தார்.

வீதிக்கு வீதி ஆலயங்கள் புதிது புதிதாக முளைத்த வண்ணம் இருக்கின்றன. கள்ள கிரடிக்கார்டு மோசடி செய்தவர்கள் துாள் கடத்தியவர்கள், கந்துவட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் ,ஏமாற்றிப்பணம் சம்பாதித்த சொலிசிஸ்ரர்கள் போன்றோர் ஆலயம் நடத்துவதைப் பார்த்தால் உண்மையிலே இவர்கள் பக்தியில் கோயில் கட்டவில்லை மாறாக பணம் சம்பாதிக்கும் தொழிலாகவே நடத்துகின்றனர் என்பதை உணர்ந்துகொள்ளமுடியும்.

ஆனால் இக் கும்பல்களின் இவ் வியாபாரத்தன்மையை புரிந்து கொள்ளாத அப்பாவிப் பக்தர்கள் கடவுளின் பேரால் பணத்தைக்கொட்டிக் கொடுக்கின்றனர்.

இதில் வேடிக்கை என்னவெனில் சோதிடர் ஒருவர் கூறியதற்கிணங்க இளைஞன் ஒருவன் நடுங்கும் குளிரில் சாமிக்கு காவடி எடுத்தான். இதில் வேதனை என்னவெனில் இவன் ஒரு பல்கலைக்கழக பட்டதாரி.. தனது அகதி வழக்கு ஜெயிக்க வேண்டும் என்பதற்காக அவன் இவ்வாறு செய்தான். ஆனால் அவன் வழக்கு நிராகரிக்கப்பட்டதுடன் இலங்கைக்கும் திருப்பி அனுப்பப்பட்டான். அவன் இதன்மூலம் தனது மூடநம்பிக்கையை உணர்ந்துகொள்ளவில்லை. மாறாக தனக்கு சனி பகவானின் குறைபாடு இருப்பதாகவும் புரட்டாசிச்சனியில் விரதம் இருந்தால் எல்லாம் நல்லபடியாக நடக்கும் என நம்பி கொழும்பு வெள்ளவத்தைக் கோயிலில் இப்போது சுற்றிக் கொண்டிருக்கிறானாம்.

ஒருபுறம் கோயிலின் பேரால் மக்கள் ஏமாந்துகொண்டிருக்க மறுபுறம் சோதிடர்கள் தம் பங்கிற்கு ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

லண்டனில் உள்ள தமிழ்மக்களை நன்றாக ஏமாற்றலாம் என தெரிந்ததும் இந்தியாவில் இருந்து சோதிடர்கள் படையெடுத்தவண்ணம் இருக்கின்றார்கள்.

ஒரு சோதிடன் சொன்னான் "தமிழர்கள் முட்டாள்கள் என்று தெரியும். ஆனால் லண்டன தமிழர்கள் இந்தளவு முழு முட்டாள்களாக இருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை" .

அவன் கூறியது உண்மைதான்.

ஏனெனில் அந்தக்காலத்தில் துப்பாக்கி ஏந்திப்போராடிய ஒருவர். அவர் மார்க்சியப் புத்தகங்களை படித்தவர் என்று சொல்வதைவிட பாடமாக்கியவர் என்று சொல்லலாம். அந்தளவுக்கு எந்நேரமும் அப் புத்தகங்களுடனே திரிந்துகொண்டிருப்பார். ஆனால் லண்டனில் இப்போது அவர் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கோயிலுக்கு சென்று வழிபடுவதுடன் லண்டன் வரும் சோதிடர்களிடம் எல்லாம் ஓடிச்சென்று தனது பலன் மட்டுமல்ல தன் மனைவி பிள்ளைகள் பலனும் கேட்டவண்ணம் திரிகிறார்..

ஒரு காலத்தில் தமிழர்களின் தலைவிதி துப்பாக்கியின் குழலில் தீர்மானிக்கப்படும் என்றவர் இன்று தனது தலைவிதியை சோதிடனிடம் தேடுவது உண்மையிலே மிகவும் ஆச்சரியமும் வேதனையும் தரும் விடயமாகும்.

விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் லண்டன் மாநகரில் இருந்து கொண்டு இப் பிறப்பை மட்டுமல்ல அடுத்த பிறப்பின் பலனையும் இந்திய சோதிடனிடம் கேட்டுக்கொண்டிருக்கும் இவ்வாறானவர்களின் முட்டாள்தனத்தை என்னவென்று சொல்வது ?

இந்தக் கும்பல்களின் கூத்துக்கள் ஒருபுறம் இருக்க சாயிபாபா பங்காரு அடிகளார் கும்பல்களின் கூத்துக்களோ மறுபுறம் மக்களை அடி முட்டாள்களாக ஆக்குகின்றது. அண்மையில் சாய்பாபாவின் கை முறிந்தபோது மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டார். தன் கை முறிவையே குணப்படுத்தமுடியாத அவர் தமது நோய்கள் எல்லாவற்றையும் குணப்படுத்தி தம்மை எல்லாம் காத்தருள்வார் என நம்பும் கும்பல்கள் லண்டனில் ஏராளம்.

இந்த மோசடி (ஆ)சாமிகள் பக்தியின் பேரால் இந்தியாவில் வியாபாரம் செய்கின்றனர். இது புரியாமல் இங்குள்ள முட்டாள் கும்பல்கள் லண்டன் குளிரில் கஸ்டப்பட்டு உழைத்த பணத்தை அவர்களிடம் ஏமாந்த வண்ணம் இருக்கின்றனர்.

சில பகுத்தறிவுவாதிகள் இதனை சுட்டிக்காட்டி திருத்த முயன்றாலும் இவ் முட்டாள் கும்பல்கள் அதனை ஏற்றுக்கொள்ளாமல் இவ் ஆசாமிகளின் லீலைகளை விஞ்ஞான ரீதியில் விளக்க முற்படுவதுதான் மிகப்பெரிய வேதனை.

லண்டனில் பக்தியின் பேரால் தமிழ் மக்களின் முட்டாள்தனத்தைப் பயன்படுத்தி சில கும்பல்கள் நன்றாக வியாபாரம் செய்கின்றன. இதுவே உண்மை நிலை. இது குறித்து வேதனையுடன் சிந்தித்த வண்ணம் பிள்ளையார் நடந்து வந்து கொண்டிருந்தபோது
அருகில் இருந்த மண்டபம் ஒன்றினுள் தமிழர்கள் சிலர் சென்றுகொண்டிருப்பதைப் பார்த்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரு

பார்தீபன்



**அடேய்** எருமமாடு எழும்படா உன்ரபோன் இப்ப பத்து தரத்துக்கு மேல எலாமடிச்சுட்டு இரவு என்ன கறுமத்த குடிச்சுட்டு படுத்தானோ தெரியேல்ல"என்று புறு புறுத்துக்கொண்டே என் காலை விடிந்தது
"இல்ல மச்சான் பியரோட வொக்கவ கலந்தடிச்சது தலதூக்கேலம இருக்குடா"என்று கூறிக்கொண்டே தன் தலைமாட்டில் இருந்த ஒரு போத்தல் தண்ணியையும் ஒரு மடாக்கிலையே குடித்து முடித்துவிட்டு

"சொறிடா இரவு கொஞ்சம் ஓவறாகீட்டு. வேல இருக்கு நான் இறங்கப்போறன் நீ படு"என்று கொண்டே எழும்பினான் தீபன்

காலையிலேயே எரிச்சலுடன் பொழுது விடிந்தது என்ன செய்வதென்று விளங்க வில்லை வேலைக்கு இறங்கவும் இன்னும் ரண்டு மணித்தியாலம் இருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்னலை திறந்து சட்டறை விலகினேன்.
விடியலின் வசந்தம் இதமாக இருந்தாலும் இலையுதிர் காலத்தின் வெறுமை இன்னொறு பருவத்தை வரவேற்க தன்னை எவ்வளவு தயார்ப்படுத்திக்கொண்டுள்ளது.அது போல மனிதன் ஏன் வெறுமையாகி புதிய கற்றலை விரும்புவதில்லை.என்று என்குள் கற்பனை கட்டிக்கொண்டிருக்க
"மசசான் டீஊத்தி வைச்சிருக்கிறண் குடி ஆறப்போகுது என்று கூறிவிட்டி" தீபன் வேலைக்கு இறங்கிவிட்டான் .
நாட்டை விட்டு அகதியாக புறப்பட்ட காலத்தில் இருந்து சொந்தங்களில் பிரிவை போக்குவது நட்புக்களின் அணைப்புதானேஆறுதல்,அவன் அவன் சேர்கையை பொறுத்துமாறுபட்டுக்கிடக்கின்றது எனக்கு வாய்த நண்பர்கள் என்னவோ என்னை கரிசனையாகப் பார்ப்பதில் ஒருபோதும் குறைந்ததில்லை

பல்லை தீட்டி முகத்தை கழுவிவர தீபன் ஊத்திவைத்த டீ ஆறி விட்டது. டீயை மைக்ரோ அவனில்வைத்து சூடாக்கி கொண்டு கோலுக்கு வந்து டீவியை.போட்டு விட்டி டீயை. உறிஞ்சிநேன்.எதிரே மேசையில் மாதசஞ்சிகை ஒன்று இருந்தது.எவ்வளவு தண்ணி அடித்தாலும் காலையில் எழுந்து வேலைக்குப்போகும்போதும் வரும்போதும் ஓய்வு நேரத்திலும் தீபன் புத்தகம் வாசிக்க தவறியதில்லை.அவன் இழப்புக்கள் அவனை ஒரு மாலைக்குடிகாரனாக்கி விட்டது சிலநேரம் நான் அவனை கடுமையாகப்பேசினால் "மச்சான் ஒரு பெக் போடாட்டி இரவேல நித்திரையே.வருகுதில்லடா.ஒரே ஊர் நினைவாக இருக்கு கெட்ட கெட்ட கனவுடா இத போட்டா ஒண்டும் தெரியுதில்ல "என்று கண்.கலங்குவான்வெளியில் நின்று பார்க்கும் எனக்கு அவன் சொன்னது சாட்டுப்போக்காக இருந்தாலும்.அவனுக்குள் ஒரு நியாயம் இருக்கத்தானே செய்கிறது இது தனிமனித உணர்வுகள் என்றில்லாமால் பொது வாழ்கை மட்டும் பரந்து விரியத்தான் செய்கிறது.

டீயை குடித்தபடியே மேசையில் இருந்த சஞ்சிகையை புறட்டினேன்.டீவியின் சத்தம் கவணத்தை குலைக்க அதை நிறுத்தி விட்டடு இதழை புரட்டினேன்.இதழலின் அட்டையிட் உட்புறத்தில் பக்கம் முழுவதுமாக ஒரு விளம்பரம். விளம்பரத்துக்குள் பார்வையை புதைப்பதற்குள் ஊரில் இருந்து அப்பா. அவர் கொஞ்சம் உடல் நிலை சரி இல்லாமல் இருந்தார். அதனால் என்னவோ நாளும் என்னோடு போன்கதைப்பார்.
அவரோடு கதைப்பது எனக்கும் மனச்சந்தோசம் தரும். சாதாரணமாக எல்லா அப்பாக்களை மாதிரி என்னப்ப இருந்ததில்லை.சுக துக்கங்களை விசாரிப்பதை தாண்டி.
அரசியல் இலக்கியம் என்று நிறையவே கதைப்போம்.அதனால் நானும் அவரும் நண்பர்கள் போல் ஆகிவிட்டோம்.நாங்கள் கதைப்பதை கோட்டுக்கொண்டு இருக்கும் அம்மாவுக்கும தங்கைமாருக்கு செமக்கடுப்பாகும். அப்போது அப்பா சொல்லுவார்."வீடுகளில் நாங்கள் அரசியல் கதைக்கவில்லை என்றால் நாடு சாக்கடையாகிவடும் என்று.

அதை இந்தக்காலத்தில் பார்கும்போது மெய்யெனத்தோன்றுகின்றது.அவர் கூறும் கதைகளும் அனுபவங்களும் அற்புதமாக இருக்கும் நான் அப்பாஎன்றதை தாண்டி அவரை நல்ல ஆசானாவே பார்கிறேன்.

"சுதன் சுகம் எப்படி" என்று கேட்டவர் வழமைக்கு மாறாக கடும் இருமல் வரவும் அம்மாவிடம் போனைக்குடுத்துவிட்டார். நான்,அம்மாவிடம் நலம்விசாரிந்து விட்டு.அப்பாவை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகச்சொல்லன்னேன்.தூரத்தில் இருந்தால் உரவுகளின் உடல் நலத்தைகூட வார்தைகலால் மட்டுமே கவனிக்க முடியும். அந்த நிமிடங்களில் வலி தொண்டை வரை வந்து கண்ணை உடைத்துப் பெருகும் இது எனனக்கென்றில்லை பிரிவுத்துயர் அனுபவிக்கும் ஒவ்வொருத்தனுக்கும் பொருந்தும்.அதுவே பழக்கப்பட்டப்பட இயல்பாய் போகும்.ஆனாலும் எப்போதாவது நினைவு என்ற ஒன்று அதை தட்டி எழுப்பிவிடும்

டீயின் மிச்சத்தை குடித்துக்கொண்டு விளம்பரத்தை பார்தேன். கி.பிஅரவிந்தன் நினைவாக ஒரு சிறுகதை போட்டிக்கு கதை அனுப்புங்கள் என்று இருந்தது . பரிசுத்தொகையும் அறிவிக்கப்பட்டிருந்தது.பரிசு தொகையில் ஈர்பில.அந்த போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணம் என்னை தட்டியது.

ஓரளவு சிறிய வாசிப்பு அனுபவத்தையும் பள்ளிப்படிப்பையும் தவிர எனக்கு எதுவும் தெரியாது ஆனாலும் இலக்கிய உலகில் பிரவேசிக்கவேண்டும்.ஒடுக்கப்பட் சமூகங்களின் முகங்களை உலகிற்கு காட்டவேண்டும் என்ற அவா.என்னை எழுத் தூண்டியது.இவற்றைத்தாண்டி ஒரு புகழ்ச்சி எனக்கு கிடைக்கவேண்டும்.என்றும் மனம் துடித்தது.சில நேரங்களில் போஸ்புக்கில் போடும் ஒரு பதிவுக்கு நல்ல மின்னூட்டம்வந்தாலே.மனதில் ஆயிரம் பட்டாம்பூச்சி பறக்கும்.

இண்டைக்கு எப்படியாவது யாரும் சிந்திக்காதவாறு கதைக்கான புதிய கருவை தேடவேண்டும்.இல்லை என்றால் இலக்கிய உலகம் தங்களுக்குள் ஒரு கருத்தை வைத்துக்கொண்டு விமர்சம் என்னும் பெயரி வாசகனை குழப்பி படைப்பின் போக்கையே மாற்றி விடுவார்கள்.ஆனாலும் இவைகளைத்தாண்டி ஒன்றை மட்டும் மனதில் நிறுத்திக்கொண்டேன்.நான் எழுதப்போகும் கதையின்கரு காலத்தின் ஒரு படிமமாக விழவேண்டும் என்பதை.

கதைக்கான கருவை சிந்தித்துக்கொண்டே.தீபன் ஊற்றிய டீயை குடித்து முடித்துவிட்டு வேலைக்கு வெளிக்கிடத்தொடங்கினேன். கதைக்கான கரு பற்றி ஒறுபுறம் சிந்திக்க அப்பாவின் உடல்நிலை பற்றி சிந்தை மறு புறம், சிந்தனைக்கு இறையூறு செய்தது. வேலைக்கு இறங்கும்போது ஒரு குறிப்புக் கொப்பியை பொக்கற்றில் எடுத்து வைத்தேன். சில நேரங்களில் பயனத்தின் போது கருபிறந்தால் குறிப்பெடுத்துக்கொள்ள.பயனங்கள்தானே நிறைய அனுபவங்களை மனிதனுக்கி தந்து போகும் ஓர் நல் ஆசான்.

ரெயினில் போகும்போது கண்களை இறுக மூடிக்கொணுடேன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கான கரு பற்றிய சிந்னையிலேயே இருந்தேன்.இன்னிலையில் இருந்துகொண்டு படைப்பாளிகளை நினைக. கை எடுத்து வணங்க வேண்டும்போல் உள்ளது.ஒரு கதைக்கே கருவைத்தேட இவ்வளவு கஸ்ரமாக இருக்கிறதே.மக்கள் இரசனைக்கேற்ப கருவைதேடி புதிது புதிதாக படைப்பவன் கும்பிட வேண்டியவனே ஆனாலும் சனங்கள் அவற்றுக்கு அங்கிகாரம் கொடுக்காது போனால் அவன் மனம் என்ற பாடு படும்.அப்பாடா நினைக்கவே பயங்கரமாக இருக்கிறதே.
பயணம் முடிந்து வேலை இடத்துக்குள் நூழைந்து விட்டேன்.பயணத்தூரத்தில் நிறையவே தலைப்பு எழுதி வெட்டியும் விட்டேன். எனி கதையை எழுதி விட்டு தைலைப்பு வைப்பம் என.முடிவெடுத்து விட்டேன்.மரக்கறியை வெட்டிக்கொண்டே கதைக்கான கரு பற்றிய சிந்தை மனதில் போய்கொண்டிருந்தது.அந்த நேரம் பார்த்து ஊரில்

அந்த நேரம் பார்த்து ஊரில் இருந்து ரெலி போன் வந்தது.அப்போதுதான் அப்பாவின் உடல் நிலை பற்றி மனம் எண்ணியது. முதாலாளி வருகிறாரா என நோட்டம் பார்த்து விட்டு போனை பதட்டத்துடன் தூக்கினேன்.நான் வேலை நேரத்தில் அதிகம் போன் பாவிப்பதாகச்சொல்லி.எச்சரிக்கப்பட்டிருக்கிறேன்.இவர்களுக்கு எங்கு தெரியபோகிறது இளசுகளின் மனம்.

ஹலோ சொல்லுங்க என்றேன் அம்மா "அப்பா உன்னோட கதைக்க வேணும் எறார் அது தான் எடுத்தனான்.இந்தா அப்பாவோட கதை என்று அப்பாவிடம் போனை கொடுத்தார்."விடிய கதைகேக்க பாழாப்போன இருமல் வந்து கதைக்க ஏலாம போய்ட்டு மருந்து எடுத்து.போட்டாப்பிறகு பரவாயில்ல உன்ன பாக்வேணும் போலா ஆசையா இருக்கையா"என்றார் தழு தழுத்த குரலில்.
எனக்கோ விசாஇல்லை அது வந்து நான் எப்ப அப்பாவபாக்கபோறது ஆனாலும் ஒரு மனத்திருப்திக்காக கூடியகெதியில வருவன் அப்பா பிறகு கதைக்கிறன் என்று போனைக் கட் பண்ணி விட்டு.கண் கலங்கிய படியே.என் கதையின் முடிவின் வரியை எழுதினேன். அகதிக்கு எப்போதும் பிரிவின் வலி சொந்தமே.

---


# கண்ணோட்டம்.

மெல்ல விரல் பிடித்து
தோளுரசி நடக்கையில்
விழிவெட்டும் பார்வை
சில்வண்டின் ஓலியாய்
என்னை
துளைத்துவிடுகின்றது
உன் கண்ணோட்டம்
முன்னே
என் மனவோட்டம்
கழுவேற்றம் கண்டுவிடுகிறது...

வஸ்ஸா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீஸில் வெளியிடப்பட்ட ஆங்கிலத்தில் பொய்யாமொழி.




அமெரிக்காவிலிருந்து பரீஸ் வந்திருந்த திருவாளர் வேலுப்பிள்ளை பேரம்பலத்தின் திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டுவிழா நேற்று மாலை(17.04.2016) பரீஸ் val de Fontenayy; நடைபெற்றிருந்தது. நான் சார்ந்திருக்கும் சஞ்சிகையின் சார்பாக கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருந்ததாலும், ஓர் இலக்கிய ஆர்வலனாகவும்(?!)அந்நிகழ்வில் கலந்து கொண்டேன்.மாலை மூன்றுமணிக்கு ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த நிகழ்வு ஏறத்தாழ மூன்று நாற்பத்தியைந்தை தாண்டிய பின்னரே அதன் ஆரம்ப கட்டத்தை தொட்டது.(எம்மவர்கள் எல்லாவற்றிலும் அதிவேகம் காட்டினாலும் வேகத்தை வேகத்தால் முந்தமுடியாமைக்கு அவர்களின் அளவுக்கதிகமான ஆர்வம்தான் காரணமோ என்னவோ) வரவேற்புரை,தமிழ்ச்சோலை மாணவிகளின் வரவேற்பு நடனம், என்பவற்றுடன் மெதுமெதுவாக ஆரம்பித்த அந்நிகழ்வில் உரையாற்றிய பலரினதும் குறள் பற்றி உரைகள் மோதகம்,கொழுக்கட்டையாகவே அமைந்திருந்தது(என்றுதான் இவைகளிலிருந்து வெளிவருவார்களோ?). சிறப்புரை வழங்குபவராக அறிவிக்கப்பட்டிருந்த என் நண்பர் குறளை நவீனகாலவோட்டத்திற்கமைய ஒப்பிட்டு வழங்கிய உரையானது நூலாசிரியரின் கருத்துக்களையும் விட அற்புதமானதாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பரின் சிறப்புரைக்கு அடுத்ததாயும் ஓர் இசை நடனக்காட்சி இலக்கிய ஆர்வலர்களை மகிழ்விக்க அமைத்திருந்தனர்.தமிழ்ச்சோலை மாணவிகளின் இசைநாட்டிய நடனம் எவ்வளவிற்கு ரசிக்கக் கூடியதாக இருந்ததோ அவ்வளவிற்கு சுவை போன சுவீங்கத்தை வைத்து சப்புவதனைப் போல இருந்தது நூலாசிரியரின் உரை.விழாவிற்கு வந்திருந்தவர்களின் மனவோட்டத்தை அறிந்தாரோ அல்லது தன் கணவரின் நீண்டதோர்சொற்பொழிவால்
அசதியாகினாரோ என்னவோ நூலாசிரியரின் துணைவியாரின் சிறு இடைமறிப்பால் நூலாசிரியர் தனது நீண்ட சொற்பொழிவை இடைநிறுத்திக் கொண்டார்.இங்கே முக்கியமாக குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய விடயம் பிரான்சில் பிறந்து வளர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் இந்நிகழ்வுக்கு ஆர்வத்துடன் வந்து கலந்து குறள் பற்றி குறிப்புரை வழங்கியிருந்தமையாகும் முதல்முறையாக அவ்விளைஞர் இப்படியானதோர் நிகழ்வில் கலந்து கொண்டிருப்பது அவர் பேச்சில் தெரிந்து.(இவ்வாறாக புலம்பெயர்தேசங்களில் பிறந்து வளர்ந்த இளையோர்களை இப்படியான நிகழ்வுகளுக்கு அழைத்து பங்குகொள்ளவைத்தமைக்காக நிகழ்வு ஏற்பாட்டாளர்களை பாராட்டவேண்டும் அத்துடன் இவ்வாறான நிகழ்வுகளுக்கு அவர்களை அழைத்து பங்குகொள்ள வைப்பதன் மூலம் புலம்பெயர் இலக்கியம் அதன் வளர்ச்சிப்போக்கில் பலமானதோர் அடியெடுத்து வைக்கும்.)
நூலாசிரியரின் உரையும் அதனைத்தொடர்ந்து நூல்வெளியீடும் இடம்பெற்றது.நூல்களை பெற்றவர்களைப் பார்க்கையில் அவர்களில் எத்தனைபேர் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின் மட்டையை திறந்து பார்ப்பார்களென்ற நெருடலுடனேயே அந்நிகழ்வு மண்டபத்தை விட்டு வெளியவர நேர்ந்தது.அத்துடன் இன்று புலம்பெயர்தேசங்களில் அடிக்கடி நடக்கும் அநேக நூல்வெளியீடுகளைப் போல உலகப் பொதுமறையான எம் திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பும் ஆகிவிடக்கூடாதென்ற அச்சமும் இயல்பாக மனதை தொடுகின்றது.

“நன்றாற்ற லுள்ளுந் தவுறுண்டு அவரவர் பண்பறிந் தாற்றாக் கடை”

வண்ணா

# மெட்டி



மெட்டி என்பது தற்போது திருமணமான இந்து சமயப் பெண்கள், விரும்பி அல்லது மரபு காரணமாக, தங்கள் கால் விரல்களில் அணியும் வளையம் போன்ற அணிகலன். இது பெரும்பாலும் வெள்ளியால் செய்யப்பட்டிருக்கும். பழங்காலத்தில் இது ஆணுக்குரிய அணிகலனாக இருந்தது. உத்தர பிரதேசம் மற்றும் பீகார் போன்ற வட இந்திய மாநிலங்களில் திருமணமான பெண்கள் பொதுவாக பிச்சியா என்று அழைக்கப்படும் மெட்டிகளை அணிவர். தென்னிந்தியாவில் பெண்கள் தங்களது கால்விரல்களில் (முதல் மற்றும் கடைசி விரல்களைத் தவிர) மெட்டிகளை அணிகின்றனர். இந்தியப் பாரம்பரிய மருத்துவத்தில் மெட்டி அணிவது கருப்பை நரம்புடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆக்க இலக்கியம் ஒரு சமூகத்தின் ஆத்மகுரல். அது அந்த சமுதாயத்தின் அடிவேரிலிருந்து வெளிவந்து மலருதல்வேண்டும். அதாவது, ஆக்க இலக்கியத்துக்கு ஆதார சுருதியாக அமையும் அனுபவம் அந்த சமூக அனுபவத்தின் அடியாக அந்த சமூகத்திற்குப் பழக்கமான மொழிக்குறியீடுகள் வழியாக வருதல் வேண்டும்”

-சிவத்தம்பி-




# www.mukadu.com

தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org